சுந்தர ராமாயணம்



பி.ஸ்ரீ

431.

வெற்றி படும் பாடு

வெற்றி மாலை மார்பிலே புரள வருகிறான்: இதுவரை எங்கும் வெற்றி, எல்லாம் வெற்றி தானே! இந்த முத்து மாலையைச் 'சன்ன வீரத்த கோவை' என்று நீட்டிக் குறிப்பிடுவது வெற்றிப் பெருமிதம் காட்டவே.

அந்தப் பகட்டு

அந்த ஆரத்தில் இடையிடையே பதித்துள்ள வெண் முத்துக்களை,

சன்னவீ ரத்த
கோவைவெண் தரளம்

[சன்ன வீரத்த கோவை — வெற்றி மாலை யாகிய பொன்னாரம். வெண் தரளம் — வெண்முத்துக்கள்.]

என்று இசைத்துக் காட்டும் போதே, புரளும் மாலை அப்படியே புலனாகிறது, அந்தப் பரந்த மார்பிலே, அந்தக் கரிய பெரிய திருமேனியிலே.

இரத்தின கசிதமான கிரீடங்களை,

மின்னொளி மௌலி
உதயமால் வரையின்
மீப்படர் வெங்கதிர்ச்
செல்வர்

[மின் ஒளி மௌலி — மின்னல் வீசுகின்ற ஒளியையுடைய கிரீடங்கள். உதய மால் வரையின் மீப்படர் — பெரிய உதயகிரியில் உதிக்கின்ற. வெங்கதிர்ச் செல்வர் — உஷ்ண கிரணங்களைச் செல்வமாகவுடைய சூரியர்.]

எனக் காட்டுவதும், ராவணேச்வரன் எத்தகைய வெற்றிப் பிரதாபத்துடன் போய்ச் சீதை யுள்ளத்தைப் பகட்டப் போகிறான் என்பதை வாசகருள்ளத்தில் தோற்றுவிக்கத் தான்.

வெற்றிப் பாட்டும் கூத்தும்

மலை போல வருகின்ற வெற்றியை அழகு செய்கின்றன மாதரின் ஆடல் பாடல்கள்.

மலையைச் சூழ்ந்து அழகு செய்யும் மயில் கூட்டம் போலக் காணும் அந்த அழகியர் குழுவில் தான் எத்தனை வகுப்பினர்:

அங்கயற் கருங்கண்
இயக்கியர், துயக்கில்
அரம்பையர், விஞ்சை
யர்க்(கு)
அமைந்த
நங்கையர், நாக
மடந்தையர், சித்த
நாரியர், அரக்கியர்
முதலாம்
குங்குமக் கொம்மைக்
குவிமுலை, கனிவாய்,
கோகிலம் துயருறும்
குதலை
மங்கையர் ஈட்டம்,
மால்வரை தழீஇய
மஞ்ஞையங் குழுவென
மயங்க.

[அங்கயல் கருங்கண் - அழகிய கயல் மீன்களைப் போன்ற கருங்கண்களையுடைய. இயக்கியர் - யக்ஷகுலப் பெண்கள். துயக்கில்-சோர்வு காட்டாத. அரம்பையர் - ரம்பை முதலான தேவ மகளிர். விஞ்சையர்க்கு அமைந்த நங்கையர் - வித்யாதர மகளிர். நாக மடந்தையர் -

நாக குல மகளிர். சித்த நாரியர் — ஸித்த குலப் பெண்கள். கனிவாய் — கோவ்வைக் கனி போல் சிவந்த வாய். கோகிலம் துயருறும் குதலை — குயில்களும் 'நமக்கு இம் மகளிரின் குரல் இல்லையே!' என்று துயரப்படுவதற்குக் காரணமான குதலைச் சொற்கள். ஈட்டம் — கூட்டம். மால்வரை தழீஇய — பெரிய மலையைச் சூழ்ந்து கொண்ட. மஞ்ஞையங்குழு என — அழகிய மயில்களின் கூட்டம் போல. மயங்க — நெருங்க.]

அந்த அழகியரிடையே புல்லாங்குழல் கேட்கிறது, அந்தக் குழலோசைக்கு இசைய வாய்ப் பாட்டும் ஒலிக்கிறது. கின்னரம் என்ற யாழிசையும் வந்து காதில் விழுகிறது. இப்படித் தேமும் தாளமும் மேளமுமாக, இந்த இசை வெள்ளம் மண்ணை நிறைத்து விண்ணையும் அளப்பது போலப் பொங்கித் ததும்புகிறதாம்.

இந்த இசையின் மகிமையால் விஷப் பாம்பும் வாயிலிருந்து அமுதம் சொரிகின்றதாம். ராவணன் சங்கித ரஸிகனல்லவா? எனினும் இந்த நெஞ்சிலுள்ள நஞ்சு அமுதமாகவில்லையே!


கவிஞனுடைய ரஸிகத் தன்மைக்குத் தான் எத்தகைய சான்று:

தொளையுறு புழைவேய்த்
 தூங்கிசைக் கானம்
 துயலுரு ஒருநிலை
 படர,
இளையவர் மிடறும்
 இந்நிலை இசைப்பக்,
 கின்னரர் முறைநிறுத்(து)
 எடுத்த
கிளையுறு பாடல்
 சில்லரிப் பாண்டில்
 தழுவிய முழவொடும்
 கெழுமி
அளையுறும் அரவும்
 அமுதுவாய்
 உகுப்ப,
 அண்டமும்
 வையமும்
 அளப்ப.

[தொளை உறு — துளை செய்யப் பெற்றுள்ள. புழை — (இங்கே) உட்புறத்திலுள்ள இயற்கைத் துவாரம். வேய் — மூங்கில்; (இங்கே) வேய்ங்குழல். தூங்கு இசைக் கானம் — தூங்கல் ஓசையுள்ள இனிய ராகம். துயல் உரு — பிறழ்தல் இல்லாமல். ஒரு நிலை படர — ஒத்து வரும்படி. இளையவர் — இளம்



பெண்கள். மிடறும்-குரலும். இங்கிலை இசைப்ப-இந்த வேய்ங்குழலின் குழலோடு ஒத்து இசைக்க. முறை நிறுத்து எடுத்த-முறையாக ஆராய்ந்து பாடத் தொடங்கிய. கிளையுறு பாடல்-(கின்னரம் என்ற யாழின்) நரம்பிலிருந்து வெளிப்படும் பாடல். சில்லரி-ஒருவகை வாத்தியம். பாண்டில்-கஞ்ச தாளம். முழவொடும்-மத்தளத் தொனியோடும். கெழுமி-ஒத்து. அளை உறும் அரவும்-புற்றில் வாழும் பாம்பும். அமுது வாய் உகுப்ப-அமிர்தத்தை வாயிலிருந்து சொரியும்படி. அண்டமும்-மேலுலகமும். வையமும்-இந்த உலகமும்.]



பாடலுக்கு இசைந்த நடனமும் நடைபெறுகின்றது:

மந்தர கீதத்(து)
இசைப்பதம் தொடர,
வகையுறு கட்டளை
வழாமல்

அந்தர வானத்(து)
அரம்பையர் கரும்பிற்
பாடலார் அருகுவந்(து)
அகவ.

(மந்தர கீதத்து இசைப்பதம் தொடர - தாழ்ந்து ஒலிக்கும் பாடல்களின் இராக அமைப்பு ஒத்து வர. வகை உறு கட்டளை வழாமல் - பல வகைப் பட்ட முறைமை தவறாமல். கரும்பின்-கரும்பு போல். அருகு வந்து அகவ-அருகே வந்து நடனம் செய்ய.]



உபசாரமும் உபத்திரவங்களும்

சில மகளிர் நடப்பதே நடிப்பது போலக் காண்கிறதாம் :

நன்னிறக் காரின்
வரவுகண்(டு) உவக்கும்
நாடக மயிலென
நடப்ப.

[நன்னிறக் காரின் – அழகிய கரு நிறமுள்ள கார்கால மேகத்தின். நாடக மயிலென – கூத்தாடுகின்ற மயில் போல.]

இம் மகளிர் ராவணனுக்கு உபசாரம் செய்வதற்கு உரிய சாமரை ஆலவட்டம் முதலிய கருவிகளை ஏந்தி வருகிறார்கள். 'நம்முடைய பாக்கியமே பாக்கியம்!' என்ற நினைப்பும் மகிழ்ச்சிக்குக் காரணம்.

இம் மகளிரில் சிலர் ராவணன்மீது காதலும் கொண்டவர். சக்ரவர்த்தியை வசீகரிக்கவும் பார்க்கின்றனராம்.

ஆம். பார்வையினாலேயே! இவர்கள் நாணிக் கோணிப் பார்க்கும் அந்த அழகும் இந்தக் கவிதை – வலையில் பிடிபடத்தான் செய்கிறது :

குழைபுகு கமலம்
கோட்டினர் நோக்கும்
குறுநகைக் குமுதவாய்
மகளிர்
மழைபுரை நடங்கட்
செங்கடை ஈட்டம்
மார்பினும் தோளினும்
மலைய.

[குழை புகு கமலம் - (காதணிகளான) குண்டலங்கள் வரையில் செல்லுகிற தாமரை மலர்க் கண்கள்; அதாவது காதளவோடிய கண்கள். கோட்டினர் நோக்கும் – (நேராகப் பாராமல்) நாணிக் கோணிப் பார்க்கும். குறுநகை – புன் சிரிப்பு. குமுத வாய் - குமுத மலர் போன்ற வாயையுடைய. மழை புரை – மழை மேகம் போல் குளிர்ச்சி மிகுந்த. தடங்கண் செங்கடை ஈட்டம் – பெரிய செவ்வரி படர்ந்த கடைக்கண் பார்வைகளின் கூட்டம். மலைய – சென்று சேர.]

இந்தச் 'சாடை மாடை'களெல்லாம் இப்போது இந்த ராவணனுடைய இருபது கண்களில் எதிலாவது விழ முடியுமா? இந்த நாணப் பார்வைகளும் கோணல் – பார்வைகளும் பாயாத மார்பிலும் பாய்ந்து நுழைகின்றன வெண்ணிலாக் கதிர்கள் வேல் நுழைவது போல.

பூந் தென்றலும் வேதனை மிகுவிக்கிறது, உருக்கிய செம்பைக் கொண்டு வந்து ஊற்றுவது போலே :

அந்தில்வேள் அனங்கன்
அழல்படத் துரந்த
அயில்முகப் பகழிவாய்
அறுத்த
வெந்துறு புண்ணின்
வேல்நுழைந் தாங்கு
வெண்மதிப் பசுங்கதிர்
விரவ,
மந்தமா ருதம்போய்
மலர்தொறும் வாரி
வயங்குநீர் மம்மரின்
வரும்தேன்
சிந்துநுண் துளியின்
சீகரத் திவலை
உருக்கிய செம்பெனத்
தெறிப்ப.

[அந்தில் – அப்பொழுது. வேள் அனங்கன் - மன்மதன். அழல் படத் துரந்த – நெருப்புத் தோன்றும்படி வீசிய. அயில் முகப் பகழி – கூர்மையான நுனியுள்ள அம்பு. வாய் அறுத்த – தனது நுனியினால் அறுத்த உண்டாக்கிய. வயங்கும் நீர் – விளங்குகின்ற நீர்த் தன்மையுள்ள. மம்மரின் – மயக்கத்தோடு. சீகரத் திவலை – மிகச் சிறிய திவலைகள்.]

பதைப்பும் திகைப்புமாய்

இவ்வளவு அவஸ்தையிலும் படாடோபத்திற்குக் குறைவில்லை; பரிவாரத்திற்கும் குறைவில்லை; உபசாரங்களுக்கும் குறைவில்லை. வானிலும் வெண்மதி போல் தானிலும் வெண் குடை விளங்கத்தான் செய்கிறது. பாற்கடலின் அலைகள் போல் வெண்சாமரைகளும் பதைக்கின்றன. ஆனால் உள்ளப் பதைப்பைப் புதைக்க முடியுமா?

நிலமகள் அலறச் சேஷனும் தலை தடுமாற மிதித்து வந்தான் என்று சொல்லும்படி அடியிட்டுத் தடபுடலாக வந்த போதிலும், உள்ளக் குழப்பத்தையோ அவஸ்தைகளையோ மறைக்க முடியவில்லையாம்.

திருமகள் இருந்த
திசைஅறிந் திருந்தும்
திகைப்புறு சிந்தையன்!

என்ற குறிப்பிலே காம பரவசமாகிய ராவண இருதயம் ஒரு சிறு வண்ணப் படமாகக் (Miniature Portrait) கிடைத்து விடுகிறது வாசகருக்கு.

சுந்தர ராமாயணம்



பி.ஸ்ரீ

432.

மானும் புலியும் ஒரு துறையில்!

ஏதோ இடையூறு புகுந்ததென்று கனக் கண்டு கோபங் கொண்டு விழித்தெழுந்து அந்த இடையூற்றை மிதித்தெறியப் போவது போலப் புறப்பட்டு வந்தவன், ஏதோ ஒன்றைப் பறி கொடுத்தவனைப் போல் அங்குமிங்கும் தேடித் திகைத்த வண்ணம் கடைசியாகச் சீதாபிராட்டி இருக்குமிடத்திற்கு அருகே வந்து, பயமுறுத்தி விடுகிறான்.

சஞ்சீவி மருந்து

திடீரென்று அங்கே தோன்றிய அரக்கனை அநுமனும் பார்த்து விடுகிறான். மரக் கிளைகளிலும் இலைகளிலும் மறைந்து பிறரால் கண்டு கொள்ள முடியாத சிறு ரூபத்துடன் இருக்கிறான் இவன்.

அமைதியாக நோக்கி வெகு விரைவில் தான் செய்ய வேண்டியது என்ன என்பதைக் குறித்தும் ஆலோசித்து அப்படியே செய்கிறான்:

இனையதோர் தன்மை
எறும்வலி அரக்கர்
ஏந்தல்வந்(து) எய்துகின்—
றானை,
அனையதோர் தன்மை
அஞ்சனை சிறுவன்
கண்டனன் அமைவுற
நோக்கி,
'வினையமும் செயலும்
மேல்வினை பொருளும்
இவ்வழி விளங்கும்' என்(று)
எண்ணி,
வனைகழல் இராமன்
பெரும்பெயர் ஓதி
இருந்தனன்,
வந்(து)அயல்
மறைந்தே.

[இனையதோர் தன்மை—இப்படிப் பட்ட தன்மையோடு. எறும் வலி — மிக்க வலிமை. அரக்கர் ஏந்தல் - ராட்சஸ ராஜன். அனையதோர் தன்மை — அங்கே நடப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கும் தன்மையுள்ள. அஞ்சனை சிறுவன் - அஞ்சனா தேவியின் புதல்வனாகிய அநுமன். வினையம் — வஞ்சனைக் குணம். மேல் வினை பொருள் - மேலே நடக்கும் காரியம். இவ்வழி — இந்த இடத்தில்; இப்போது. வனை கழல் — புனைந்துள்ள வீரக்கழல்.]

மேலே நடக்கப் போவதைச் செவ்வையாகக் கவனிக்க வேண்டுமென்று, தான் முன்னிருந்த இடத்தை விட்டுச் சிறிது நெருங்கிவந்து, முன்போல் இலைகளுக்கும் கிளைகளுக்கும் இடையில் மறைந்த வண்ணம் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

ராவணனுடைய வஞ்சனைக் குணத்தை நன்கறிந்தவன்: எனவே எந்த நிமிஷத்தில் என்ன அபாயம் நேர்ந்து விடப் போகிறதோ என்ற கவலையும் உள்ளத்தை வேதப்புகிறது. ஆனால் எல்லாத் துன்பங்களுக்கும் எல்லா நோய்களுக்கும் மருந்து தான் தெரியுமே அநுமனுக்கு! ஆம்; ஒரு மருந்து, ஒரே மருந்து — ஸர்வரோக நிவாரண சஞ்சீவி. ஸம்பாதிக்கு இடர் நீங்கியதைப் பார்த்திருக்கிறான்.

ஏன், எதிரியான வாலியும் பயன்படுத்திக் கொண்ட மருந்து, தன் கதிக்கும் தன் மகன் வாழ்விற்குமாக!

கடல் தாண்டி வரும்போது, தானே உபயோகித்துக் கரை கண்டானல்லவா? அந்தக் கண்கண்ட மருந்தைத்தான் இப்போதும் உபயோகித்துப் பார்க்கிறுன்.

செலவில்லை, சிரமம் இல்லை. இம் மருந்துதான் ராம நாமம் — 'இராமன் பெரும் பெயர்.'

'ராம ராம' என்று சொல்லி அனுமன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, ராவணன் தன்னேடு வந்த கூட்டத்தை விலகி நிற்கச் செய்து சீதாதேவி முன் தோன்றுகிருன். அப்போது அவள் அடைந்த நிலையை எப்படித்தான் வருணிக்க முடியும்?

புலியும் மானும்

கம்பன் வருணிக்கவில்லை! தன் அகக் கண்ணைப் பொருத்தி உங்களையும் காணச் செய்கிருன் — அவ்வளவு தான்:

ஆயிடை அரக்கன்,
அரம்பையர் குழுவும்
அல்லவும் வே(று)அயல்
அகல,

மேயினன், பெண்ணின்
விளக்கெனும் தகையாள்
இருந்துழி; ஆண்(டு)அவள்
வெருவி,

போயின உயிரள்
ஆமென நடுங்கி,
பொறி-வரி- எறும்வலி-
புகைக்கண்—

காய்சின- உழுவை
தின்னிய வந்த
கலையிளம் பிணையெனக்
கரைந்தாள்.

[ஆயிடை — அப்போது. அரக்கன் - ராவணன். அரம்பையர் குழு - தெய்வப் பெண்களின் கூட்டம். அல்லவும் - மற்றவர் கூட்டமும். மேயினன் - அடைந்தான். விளக்கு எனும் தகையாள் - விளக்குப் போன்ற சீதை. இருந்துழி - இருந்த இடத்தில். ஆண்டு-அந்த இடத்திலே. வெருவி - அஞ்சி. போயின உயிரள் ஆமென் - உயிர் போனவள் போல. பொறி - புள்ளிகள். வரி - கோடுகள். எறும் வலி - மிக்க வலிமை. காய்சின உழுவை - காய்ந்து எரியும் கோபத்தையுடைய புலி. தின்னிய - தின்னும் பொருட்டு. பிணை - பெண்மான்.]

'பெண் விளக்கு' இருந்த இடத்தில் அரக்கன் திடீரெனத் தோன்றியதும், அந்த விளக்கு அப்படியே அவிந்து போய் விட்டதா, என்ன?. என்ன நடுக்கம்! உயிரே போய்விட்டதா?

இளம் பெண் மான் ஒன்று திடீரெனத் தன் கண்ணெதிரே ஒரு புலியைப் பார்த்து விடுகிறது. அந்தப் புலியின் புள்ளிகளும் கோடுகளும், பலமும் பசியும், கொடுமையால் — கோபத்தால் புகைந்தெரியும் கண்களும் மானுக்கு எவ்வளவு நடுக்கத்தை உண்டாக்கும்?

'இந்தப் புலி நம்மைத் தின்னும் பொருட்டே வந்து விட்டது!' என்ற நிலைதான், நடு நடுங்கி நிலைகுலைந்து போகும் சீதையின் நிலை.

மானை அப்படிப் பயமுறுத்தும் அந்தப் பதினறடி வேங்கையைப் 'பொறி — வரி - எறும்வலி - புகைக்கண் - காய்சின உழுவை' என்ற தொடர் அப்படியே கண் முன் நிலைக் காட்டுவது போல் இருக்கிறதல்லவா?

அரக்கர்கோனுக்கு ஏற்கெனவே கொடுத்திருக்கும் அடைமொழியான 'எறும் வலி' புலிக்கும் வருகிறது, பாருங்கள்.

பாம்பும் தானும்

சீதை முதல் முதல் ராவணனை மாய சந்யாசியாகக் கண்டாள். 'வாருங்கள் உள்ளே' என்று மரியாதையாக உபசரித்துக்கொண்டு எதிரே வந்தாள். மாரீசனின் மாய உருவாலும் மாயக் குரலாலும் வஞ்சிக்கப் பட்டவள், ராவணனுடைய மாய வேஷத்தாலும் வஞ்சிக்கப்பட்டாள்.

கோபம் பொங்கி மாய வேடம் விட்டுப் போக சந்யாசி மறைந்து அந்த இடத்திலே பலதலைப் பாம்பு ஒன்று உக்கிரமாய் எழுந்து படங்களை வரிசையாக விரித்துச் சீறுவது போலத் தோன்றியது ஒரு கணம். மறு கணமே திகைப்பும் பிரமிப்புமா யிருந்த சீதையின் கண்ணெதிரே தோன்றினன் லோக பயங்கரன், தன்னுடைய பத்துத் தலைகளையும் இருபது கைகளையும் எத்தனையோ பாம்புகளின் படங்களைப் போலப் பரப்பிக் காட்டிய வண்ணம்.

சீதை அன்று சொன்ன கதை

ராவண சந்யாசி தன்னுடைய எதார்த்த சொரூபத்திற்குரிய இருபது

தோள்களைக் குறித்துப் பிரஸ்தாபித்த போது சீதை பயப்பட வில்லை ; அந்த இருபது தோள்கள் பிரமாதமாகத் தோன்றவில்லை.

'பல தோள்கள் இருந்தாலும் அவற்றில் பலம் இருக்க வேண்டாமா?' என்று கேட்டு விடுகிறாள். ஆயிரந் தோள்களோடு கூடிய கார்த்தவீரியார்ச்சுனனின் கதை கேட்டிருந்தாள்.

அந்தத் தோள்-வனத்தை யெல்லாம் விறகு தறிப்பது போலக் கோடாலியால் வெட்டித் தள்ளிய பரசுராம பராக்கிரமத்தை ராவண சந்யாசியின் காதில் போட்டு வைத்தாள். அப்படியாவது அந்தச் சந்யாசிக்கு ராவண பீதி போகட்டுமென்று தான்!

திக்விஜய காலத்திலே ராவணன் கார்த்தவீரியனால் வெல்லப்பட்டுச் சிறை வைக்கப்பட்டான் என்பதையும் ராவண சந்யாசிக்கு ஞாபகப்படுத்தி வைத்தாள்.

அதே கார்த்தவீரியனுடைய ஆயிரந் தோள்களையும் தன் சிறு பிராயத்திலே பரசுராமன் மழுவால் எறிந்து அறுத்துத் தள்ளியதைச் சொன்னவள், அந்தப் பரசுராமனையும் வலி தொலைத்தவன் தன் கணவன் என்பதைச் சொல்லாமலே உய்த்துணர விட்டு விட்டாள்.

ஆனால் சீதையின் வாசகம் காதில் விழுந்ததும், என்ன நேர்ந்துவிட்டது சாமியாருக்கு? உடம்பிற்கு என்ன வந்து விட்டது, கார்த்தவீரியன் கதை கேட்டதும்?



'கரண்டநீர் இலங்கை
வேந்தைச் சிறைவைத்த
கழற்கால் வீரன்
திரண்டதோள் வனத்தை
எல்லாம், சிறியதோர்
பருவம் தன்னில்
இரண்டுதோள் ஒருவன்
அன்றோ மழுவினால்
எறிந்தான்?' என்றாள்.

[கரண்டம் - நீர்க் காக்கைகள். கழற்கால் வீரன் - கார்த்த வீரியார்ச்சுனன்.]

என்றதும் சந்யாசிக்குக் கண்கள் எரிந்தன, நெருப்பு எரிவது போலே. இரண்டு கண்களும் எரிந்து சுடர் வீசி இருபது கண்களாகி விட்டன!

அன்றும் இன்றும்

விரிந்தன இருபது தோள்கள், நிமிர்ந்தன தலைகள் மகுடங்களுடன்:

என்றவள் உரைத்த -
லோடும் எரிந்தன
நயனம்; திக்கில்
சென்றன திரள்தோள்;
வானம் தீண்டின
மகுடம்; திண்கை
ஒன்றொடொன்(று) அடித்த;
மேகத்(து) உரும்என
எயிற்றின் ஒளி
மென்றன; வெகுளி
பொங்க, விட்டது
மாய வேடம்!

[திண்கை - வலிய கைகள். உரும் என - இடி போல. எயிற்றின் ஒளி - பல் வரிசைகள். வெகுளி - கோபம்.]

வெகுளி பொங்கி வேஷம் நழுவ, சீதைக்குச் சந்தேகம் வந்து விட்டது; ஒன்றும் தெரியவில்லை:

தெரிவரு நிலைய -
ளாகத் தீவிடத்(து)
அரவம் தானே
உருகெழு சீற்றம்
பொங்கிப் பணம்விரித்(து)
உயர்ந்த தொத்தான்.

[தெரிவரு நிலையளாக - ஒன்றும் தெரியமாட்டாத நிலைமையை உடையவளாக. தீ விடத்து - தீயைப்போல் கொடிய விஷமுடைய. அரவம்-பாம்பு. உருகெழு சீற்றம் - கண்டோர் நடுங்கும் கோபம். பணம் - படம்.]

அன்று ராவணனைப் பத்துத் தலைப் பாம்பு சீறுவது போலக் கண்டவள், இப்போது பதினாறு அடி வேங்கை போலக் காண்கிறாள்.

அங்கே 'தீ விடத்து அரவம்... சீற்றம் பொங்கிப் பணம் விரித்து உயர்ந்த' தோற்றம், அந்தப் பத்துத் தலைப் பாம்பைக் கண்முன் காட்டுவதைக் காட்டிலும், இங்கே 'பொறி-வரி- எறும்வலி - புகைக்கண் காய்சின உழுவை தின்னிய வந்த' தோற்றம் இந்தப் பதினாறு அடி வேங்கையை அப்படியே பயங்கரமாய் அதிசயமாய்க் கண்முன் கொண்டு வந்து காட்டி விடுகிறது.

அங்கே ராவணனைக் கண்ட சீதையின் நடுக்கத்தைப் பின்வருமாறு வருணித்தான் கவிஞன்:

மாற்றமொன்(று) இல்லை,
செய்யும் வினை இல்லை,
வரிக்க லாகாக்
கூற்றம்வந் துற்ற
காலத்(து) உயிரெனக்
குலைவு கொண்டாள்.

[மாற்றம் – வார்த்தை. வினை–செயல். வரிக்கலாகாக் கூற்றம் – எவராலும் கட்டுப் படாத எமன்.]

இங்கேயோ,

காய்சின உழுவை
தின்னிய வந்த
கலையிளம் பிணையெனக்
கரைந்தாள்

என்று முடிப்பதே சீதையின் பீதியைப் பிரமாதமாய்க் காட்டி விடுகிறது.

ஆரணிய காண்டத்துக் கம்பசித்திரத்திற்கும், சுந்தர காண்டத்துக் கம்பசித்திரத்திற்கும் இடையே கம்பனுடைய கவித்திறன் எப்படி வளர்ந்து வந்திருக்கிறது என்பதற்கு, அந்தப் 'பாம்பு' வருணனையையும் இந்தப் 'புலி' வருணனையையும் ஒப்பிட்டுப் பார்ப்பது நலம்.

* * *

ஆனால் என்ன ஆச்சரியம்! இப்போது ராவணனுக்கும் உயிர் நிலை குலைகிறதாம்.

பயந்து நடுங்கும் மானும், பயமுறுத்தும் புலியும் ஒரே துறையிலா?

சுந்தர ராமாயணம்



433.


பி.ஸ்ரீ

‘வாழி ஜானகி’

‘இரவில் பெரும் பொழுது கழிந்து விட்டது. பிராம்மண ராட்சஸர்களின் வேத கோஷங்கள் அநுமன் காதிலும் விழுந்தன. அப்போது மங்கள வாத்தியங்கள் முழங்கக் கேட்டுக் கொண்டே ராவணேச்வரன் விழித்துக் கொண்டான். விழித்துக் கொண்டதும் சீதையை நினைத்துக் கொண்டான். பல அணிகளாலும் தன்னை அலங்கரித்துக் கொண்டு புறப்பட்டான்’ என்று வால்மீகி சுந்தர காண்டத்தில் பதினெட்டாவது ஸர்க்கம் தொடங்குகிறது.

நாலு வேறு பாடுகள்

திரிஜடை கனவிற்குப் பின் ராவணன் வருகையைக் கம்பன் குறிப்பிட வால்மீகி, இந்த வருகைக்குப் பின் திரிஜடை கனவினைக் கூறுகிறார் என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறோம்.



ராவணனும் ஏதோ ஒரு கனவு கண்டு விழித்துக் கொண்டதாய்க் கம்பன் கூற வால்மீகியோ, மங்கள வாத்தியகோஷம் கேட்டு ராவணன் விழித்துக் கொண்டதாகக் கூறியுள்ளார்.

ராவணன் தோட்டத்துள்ள வீதியின் வழியாய் அசோக வனத்திற்கு வந்து கொண்டிருக்கும் சந்தர்ப்பத்திலும் வால்மீகியால் அசோக வனத்தின் அழகுகள் கொஞ்சம் வருணிக்கப்படுகின்றன. கம்பனோ ராவண பவனியின் ஆடம்பர அழகுகளிலேயே ஈடுபடுகின்றான்.

ராவணனுடைய மனைவியரில் பலரும் தேவேந்திரனைத் தேவமாதர்கள் தொடர்வது போல் தொடர்ந்து வந்தார்கள் என்கிறார் வால்மீகி. இப்படி மனைவியர் தொடர்ந்து வந்ததாக உய்த்துணரவும் கம்பன் இடம் கொடுக்கவில்லை. அடிமைகளான தெய்வப் பெண்களே தொடர்ந்து வந்ததாய்க் கூறியுள்ளான்.

வால்மீகி — ராவண பவனி

இனி வால்மீகியைத் தொடர்ந்து ராவண பவனி காண்போம்.

ராவணனுடைய தேவிமாரில் சிலர் தங்க விளக்குகளையும், சிலர் சாமரங்களையும், சிலர் விசிறிகளையும் தங்கக் கூஜாக்களையும் ஆசனங்களையும் எடுத்துக் கொண்டு வந்தனர். சிலர் கத்திகளையும் தூக்கிக் கொண்டு வந்தனர். கம்பனில், ‘தாடகைக்கு இரட்டி’ வலிமை வாய்ந்த அரக்கியரின் முரட்டுக் கொலைகாரக் கைகள், வாள் வேல் சூலம் இருப்

புலக்கை (அரிசி இட்ட அல்ல!) எல்லாம் தூக்கி வருகின்றன.

ஒருத்தி இரத்தினம் இழைத்த தங்கப் பாத்திரத்தில் சுவையுள்ள பானத்துடன் வந்தாள். வேறொருத்தி தங்கக் காம் புள்ள வெண் குடையுடன் பின்னே வந் தாள்.

மின்னற் கொடிகள் மேகங்களுடன் வருவதுபோல் ராவண பத்தினிகள் தொடர்ந்தனர். மதுபான மயக்கத்தா லும் உறக்க மயக்கத்தாலும் கண்கள் சுவந்து சுழல, தாறுமாறும் அணிந்து கொண்ட ஆபரணங்களுடன் கூந்தல் குலைந்த உடம்பில் புரள வந்து கொண் டிருந்தார்கள்.

இவர்கள் தங்கள் நாயகன் மீதுள்ள பாசத்துடனும் கௌரவ புத்தியுடனும் தொடர்ந்து வர, ராவணனோ காம பரவசனாய்ச் சீதைமீது மனஞ் செலுத் தியவனாய் வந்து கொண்டிருந்தான்.

திடீரென்று காற் சலங்கைகளும் மேக லாபரணச் சலங்கைகளும் மதுரமாக ஒலிப்பது அனுமன் காதில் விழுந்தது. 'அப்போதுதான் கடைந்து குழப்பிய பாற்கடல் நுரை போல்' இருந்த அந்தச் சுத்தமான உத்தரியத்தை ஒய்யாரமாக இழுத்து விட்டுக் கொண்டு (பொருள் பொதிந்த ஒரு நுணுக்க விவரம் — a significant detail என்பர் ரஸிக விமர்சகர்) நடந்து வந்த பிரதாப லங்கேச்வரனை அனுமன் உற்றுப் பார்த் தான்.

மேலே நடக்கும் காரியங்களை நன்று ப் பார்க்க வேண்டுமென்று கீழ்க்கிளை யில் இறங்கினான்.

அப்போது சீதை நிலை

ராவணனைச் சீதை கண்டதும், பெருங்காற்றில் அடிபட்ட வாழை போலக் கிடுகிடென்று நடுங்கியதாக வால்மீகி கூறுகிறார். பிறகு அழுது கொண்டு உட்கார்ந்திருந்தாள் என்றும், கையில் முழுகும் கப்பலைப் போல் பிடிக் கப்பட்டாள் என்றும், நிலத்திலே வெட் டித் தள்ளப்பட்ட மரக்கிளை போலவும், சேற்றுப் பூசப்பட்ட தாமரைக் கொடி போலவும் காணப்பட்டாள் என்றும் வால்மீகி வருணிக்கிறார்.

ராமனே கதியென்று நம்பியிருந்தவள் தன் கணவனை ஸ்தூல தேகத்தால் அடைய முடியாமல் எண்ணங்களாகிய குதிரைகளை மனம் என்ற இரதத்தில் பூட்டி அதிவேகமாய்க் கணவனுடைய சமீபத்தை அடைந்து விட்டாளாம். சீதை ராமனையே தியானித்துக் கொண் டிருந்தாள் என்பது சாதுரியமாய்க் கூறப்படுகிறது.

சீதையின் நிலைமைக்கு மேன்மேலும் உபமானங்கள் அடுக்கடுக்காய் வந்து கொண்டிருக்கின்றன. இவற்றுள் சில ஏற்கெனவே — அதாவது ராவணன் வருவதற்கு முன்பே — சீதையின் துயர நிலையை வருணிக்க உபயோகிக்கப் பெற்றவை.

சுமார் இருபத்தைந்து உபமானங்கள் சீதையின் நிலையைப் புலப்படுத்த வருகின்றன. கம்பனோ, 'பொறிவரி... கலையிளம்பிணை' என்ற அந்த ஒரே உபமானத்துடன் திருப்தி யடைகிறான்.


ஸர்க்கம் இருபதில் ராவணன் சீதையை மயக்கப் பார்க்கிறான். அடுத்த ஸர்க்கத்தில் சீதை ராவணனுக்கு இதோ பதேசம் செய்கிறாள்.

வால்மீகியில் ராவணன் பேச்சு

'என்னிடம் தயவு செய். நீ ஏன் என்னைக் கண்டு அஞ்சுகிறாய்? என்னிடம் உனக்குப் பிரியம் உண்டாகாதவரை உன்னைத் தொட மாட்டேன். சுந்தரீ, என்னை நம்பு. வீணாய்த் துக்கத்துக்கு இடங் கொடுத்து உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே. கூந்தலை ஒரு ஜடை யாய்த் தொங்க விட்டிருப்பதும், வெறுந் தரையில் படுப்பதும், உண்ணா விரதம் கிடப்பதும் உனக்குத் தகாத செயல்கள்...' என்றெல்லாம் ராவணன் பேசினான். ரஸிகன் போலவும், துதி பாடும் கவிராயன் போலவும் பேசினான்.

'நீ பட்டமகிஷியாக இரு' என்றான். 'உனக்குச் சகல மங்களங்களும் உண் டாகட்டும்' என்று வாழ்த்தினான். 'நான் திக்விஜயம் செய்து அபூர்வமான பொருள்களைக் கொண்டு வந்திருக்கி றேன். அவைகளும் நானும் இந்த லங்கா புரியும் உன்னுடையவை' என்று தாரா ளம் தண்ணீர் பட்ட பாடாய்ப் பேசி னான். 'உனக்காக இந்தப் பூமி முழுவ தையும் வென்று உன் தந்தையான ஜனகமகாராஜாவுக்குக் கொடுக்கிறேன்' என்றும் பிதற்றினான்.

'பலத்திலும் பராக்கிரமத்திலும் வீரி யத்திலும் தைரியத்திலும் என்னைப் போன்றவன் உண்டோ?' என்று தற் புகழ்ச்சியும் பாடிக் கொண்டான். 'உடுக்க உடையின்றி, உண்ணச் சோறின்றி, படுக்க இடமின்றி அலைந்து கொண்டிருக்கும் ராமனால் உனக்கென்ன



பயன்? அவன் இது வரையில் பிழைத்திருக்கிறானே, இல்லையோ? ஒருவேளை பிழைத்திருந்தாலும், ராஜ்ய லட்சுமியாலும் ஜயலட்சுமியாலும் கைவிடப்பட்ட அவனும் என் வசமுள்ள உன்னை மீட்டுச் செல்ல முடியுமோ?' என்று தூஷணைகளும் செய்தான்.

சீதை நிஸ்வரத்துடன் இதோபதேசம் செய்து பார்த்தாள். ஒரு துரும்பைக் கிள்ளி ராவணனுக்கும் தனக்கும் நடுவில் போட்டுப் பதில் உரைத்தாள்.

இனி நாம் சீதையின் இந்த இதோபதேசத்தை அறிந்து சொல்வதற்கு முன் கம்பன் கதையைத் தொடர்ந்து சீதையை ராவணன் அணுகிப் பேசும் அந்தப் பேச்சையும் கவனிப்போம்.

கம்பனில் மூவர் நிலை

அதற்குமுன், சீதையின் நிலையையும், ராவணனுடைய நிலையையும் — அதாவது பயப்படுகிறவன் நிலையையும் பயமுறுத்துகிறவன் நிலையையும் — எவ்வளவு பொருத்தமாக (மானஸ சாஸ்திரப் பொருத்தமாக) நம் கவிஞன் வருணிக்கிறானென்று பார்ப்போம்.

இருவருக்கும் ஒருங்கே ஆவி நிலை குலைந்து போகிறதாம். பார்த்துக் கொண்டிருப்பவனுக்குத் தான் என்ன மனவுளைச்சல்! இதோ இம்மூவர் படம்:

கூசி ஆவி
குலைவுறு வாளையும்,
ஆசை யால்உயிர்
ஆசழி வானையும்,

காசில் கண்ணிணை
சரன்றெனக் கண்டனள்,
ஊச லாடி
உளேயும் உளத்தினன்.

[குழைவுறு வானேயும் — குலேந்து நடுங்குகின்ற சீதையையும். ஆசு — கட்டு; பற்றுக்கோடு. காசில் — குற்றமற்ற. கண்ணிணை — கண்கள் இரண்டும். ஊசல் — ஊஞ்சல்.]

இங்கே மூன்று ஸ்தூல உருவங்களைப் படம் பிடிக்க வில்லை, ஸ்காட் முதலான ஆசிரியர்களைப் போல. ஷேக்ஸ்பியர்—பாத்திரங்கள் போல் இந்த உயிர்ப் படமும் இருதயத் துடிப்புகளுடன் வருகிறது.

சீதை பயத்தாலும், ராவணன் ஆசையாலும், அநுமன் 'என்ன ஆபத்து நேர்ந்து விடுமோ?' என்று அப்படியும் இப்படியுமாய் ஊஞ்சலாடும் உள்ளத்தினுலும், தத்தளிக்கிருர்கள். ஒரே சிறு படத்தில் மூவர் — என்ன சேர்த்தி, என்ன அவஸ்தை!

இப்போது அநுமனுள்ளத்திலே ஒரு மகத்தான மாறுதல் ஏற்படுகிறது. சீதை இந்தக் கொடிய சிறையில் இவ்வளவு துக்கத்தையும் பொறுத்துக் கொண்டு, எப்படித்தான் பிழைத்திருந்தாளோ! முகத்திலேதான் என்ன ஏக்கம், என்ன தவிப்பு, என்ன தேட்டம்!

தவிப்பு என்ருல் தவம் செய்கிறமாதிரி ஒரு தவிப்பு! தேட்டம் என்ருல், ராமன் இருக்கும் அந்த ஸ்தலத்தையே சோதனை — விளக்கு வைத்துத் தேடுவது போன்ற தூரப் பார்வை.

'ராவண பயம் எப்படி நடுங்கச் செய்தது, நிலை குலையச் செய்தது' என்பதையும் அநுமன் கண்டு கொள்கிருன். ராவணன் உயிரோடுங்கி நிற்கும் இந்த நிலையையும் கண்டு கொள்கிருன்.

சீதையின் தவிப்பாகிய தவக்கோயிலை நீதி நெருங்க அஞ்சுகிருன் அரக்கன் என்பதையும் உணர்ந்து கொள்கிருன்.

இதற்கு முன் அநுமனுள்ளத்திலே, ராமனுக்குத் தான் முதலிடம். இனி இச் சீதையின் தவமும் தேட்டமும் படுத்துகிற பாட்டிலே இந்த ராம பக்தனுடைய இருதயத்தில் ராமனுக்கும் இரண்டாவது ஸ்தானம் தான்; முதல் ஸ்தானம் சீதைக்கே!

வாழ்த்துகிருன், வாழ்கிருன்

இத்தகைய ஆனந்த வெறியுடன் இந்த மிகவும் நெருக்கடியான நிலையில், உள்ளத்தின் ஆழத்திலிருந்து வருகிறது வாழ்த்து:

'வாழி ஜானகி,
வாழிஇ ராகவன்;
வாழி நான்மறை,
வாழியர் அந்தணர்;
வாழி 'நல்லறம்!'
என்றென்று வாழ்த்தினன்
ஊழி தோறும்
புதிதுறும் கீர்த்தியான்.

[அந்தணர் — ஜீவகாருணிய உணர்ச்சியோடு கூடிய முனிவர்கள். ஊழி — யுகம். புதிது உறும் — புதிது புதிதாக வளர்ந்து கொண்டேயிருக்கும்.]

இந்த இருதய பூர்வமான வாழ்த்துப் பாட்டை நாமும் இருதய ஆழத்திலிருந்து (உதட்டிலிருந்தல்ல) பாடிப் பார்க்க வேண்டும். அப்போது எவ்வளவு தெளிவாய்க் கேட்கிறது அநுமன் தனக்குள்ளே சொல்லிக் கொள்ளும் இருதய கானமாகிய வாழ்த்து!

இப்படி எல்லா க்ஷேமங்களுக்கும் காரணமாய்ச் சிறை புகுந்து தவங் கிடக்கும் தியாக சுந்தரியை அநுமன் இப்போது இப்படி வாழ்த்துவது எவ்வளவு பொருத்தமாய் அமைந்திருக்கிறது!

இந்த மகாவீரனுடைய வாழ்த்தினுலும் செயல் — திறனுலும் மேலே சொன்ன க்ஷேமங்களெல்லாம் ஏற்படப் போவதால்,

ஊழி தோறும்
புதிதுறும் கீர்த்தியான்

என்று அநுமனைக் கவிஞனும் வாழ்த்துகிருன்.

சாமானிய வீரருக்குக் காலஞ் செல்லச் செல்லக் கீர்த்தி மங்கும், தேய்ந்து மாய்ந்து போகும், அநுமனுக்கோ கீர்த்தி வளர்ந்து கொண்டேயிருக்கும் என்று கூடச் சொல்லவில்லை, மேன்மேலும் புதிது புதிதாக வளரும் என்கிருன் கவிஞன்.

மகாகவிகளின் வாழ்த்தினுலும் பாடல்களினுலும் அல்லவா அநுமனைப் போன்ற மகாவீரர்களும் புதிய புதிய வளர்ச்சிகளை அடைகிருர்கள்?

அநுமனுடைய வாழ்த்து: 'வாழி ஜானகி......வாழி நல்லறம்!' ஜானகியின் வாழ்த்தினுல் சிரஞ்சீவி வீரனுகப் போகிருன், ரஸிகர்களுக்கோ, கம்பனின் சிரஞ்சீவிக் கவிதையே சிரஞ்சீவியாக்கி விடுகிறது அநுமவீரனை!

சுந்தர ராமாயணம்



434.

'அடி சூடும் அரசு'

பி.ஸ்ரீ

அனுமன் வாழ்த்திக் கொண்டிருக்கும் போதே அரக்கன் சீதைக்கு அருகே வந்து விடுகிறான். அவன் வந்த ராஜ-மிடுக்கு எங்கே இப்போது?

படாடோபம் பரிதாபமாகி நிற்பதைப் பாருங்கள்:

அவ்வி டத்(து)அரு(கு)
எய்தி அரக்கன்தான்,
'எவ்வி டத்(து)எனக்(கு)
இன்னருள் ஈவது?
நொவ்வி டைக்குயி—
லே! நுவல்க' என்றனன்,
வெவ்வி டத்தை
அமிழ்தென வேண்டுவான்!

[நொவ்விடை — வருந்தும் இடை. நுவல்க—சொல்வாயாக. வெவ்விடத்தை —கொடிய விஷத்தை.]

காமத்தின் சித்திரவதை

'நொவ்விடைக் குயிலே!' என்று கொஞ்சும் குரலில் அழைத்து, 'நீ அருள் பாலிக்கப் போவதை உன் குயில்-மொழிகளால் தெரிவிப்பாயாக' என்று சீதைக்கு அருகே சென்று அரக்கர் கோன் செய்து கொண்டிருக்கும் பிரார்த்தனையைக் கவிஞன் நமக்கு அருகே வந்து அப்படியே காட்டுவது போலத் தோன்றுகிறது.

'அதோ அந்த அரக்கன் அமுதம் என்று சொல்லும் நஞ்சை யல்லவா ஆசைப்படுகிறான்!' என்று நம் காதோடு காதாகச் சொல்வது போலவும் தோன்றுகிறது. தோற்றத்தால் கொடிய விஷத்தைக் கற்கண்டு என மயங்கும் பேதைக் குழந்தையின் நிலைக்கே வந்து விடுகிறானாம்.

எப்பேர்ப்பட்ட ராவணேச்வரன் இப்போது என்ன பாடு படுகிறான், மன்மத பாணங்கள் கொல்லாமல் கொல்ல!

ஈசற் காயினும்
ஈடழி வுற்(று)இறை
வாசிப் பாடழி—
யாத மனத்தினன்,
ஆசைப் பாடும்,அந்
நாணும் அடர்த்திடக்
கூசிக் கூசி
இனையன கூறினன்.

[ஈடு — ஒப்பு. இறை — கொஞ்சமும். வாசிப்பாடு — இயற்கையான பெருமை நிலை. அடர்த்திட — தாக்கி ஹிம்ஸிக்க. இனையன — இப்படிப்பட்ட வார்த்தைகள்.]

'வடக்கே பரமேச்வரன், தெற்கே ராவணேச்வரன்' என்றல்லவா அந்தஸ்தும் பெருமையும்? அந்த ஈச்வரன் இந்த ஈச்வரனால் ஒரு காலத்தில் உபாஸிக்கப் பட்டவர்தான். அதற்காக அந்த ஈச்வரன் முன்னிலையிலும் இந்த ராவணேச்வரன் தன் ஸ்தானத்திற்குக் குறைவான வணக்க ஒடுக்கங்களை ஸமர்ப்பிப்பதில்லையாம். பணிவெனும் சைவமன்று இவன் வழிபாடு!

அப்பேர்ப்பட்டவன் இப்போது தன்னுடைய சிறையிலிருக்கும் அபலை முன் என்ன பாடு படுகிறான்!

நாணம் ஒரு புறம் வதைக்கிறது; ஆசை ஒரு புறம் ஹிம்ஸிக்கிறது. இந்தப் பிராணவஸ்தையில் சிந்தனைகளும் வார்த்தைகளும் குழம்பி வருகின்றன.

இன்றி றந்தன,
நாளை இறந்தன!

என்று புலம்புகிறான். எத்தனை 'இன்று'கள், 'நாளை, நாளை' என்று எத்தனை நாள்கள், ஆசை காட்டி மோசஞ் செய்து நாசமாகி விட்டன!

கொன்றி றந்தபின்
கூடுதி யோ?

எனக் கதறுகிறான்.

பயங்கரனு, பயங்கொள்ளியா?

'என்னை நீ கொன்று நான் இறந்து போன பின்புதானா இரங்கப்போகிறாய்?' என்று கதறியவன், 'ஏகாதிபதி



யும் சர்வாதிகாரியுமாகிய தனக்கும் இந்தத் தோல்வி, இந்த எளிமை, ஏற்படலாமா?—இதைச் சீதைதான் காண்பது நியாயமா?' என்றெல்லாம் சீதையை நோக்கிப் பிதற்றுகிறான்.

ஏகாதிபதியென்றால் இந்தப் பூலோகத்திற்குத் தானா? இந்த உலகத்தோடு சொர்க்கம் பாதாளம் என்ற அந்த இரண்டு உலகங்களையும் சேர்த்து அரசு புரிகின்றானாம். அத்தகைய அரசாங்கத்தின் செல்வத்திற்கும் எல்லையுண்டா?

அப்பேர்ப்பட்ட சர்வாதிகார அரசியலிலே கலகம் என்பது தலை காட்ட முடியுமா? என்றும் இப்போது ஒருவன் துணிந்து கலகம் செய்கிறானாம். கலகம் ஏற்பட்டதே அவமானம்; அதிலும் தோல்வி ஏற்படுவதென்றால் எவ்வளவு மகத்தான அவமானம்! அப்படிப்பட்ட தாழ்வும் தளர்ச்சியும் வந்துவிடுமோ என்று கவலைப்படுகிறான் ராவணன்.

'அந்தக் கலகக்காரன்தான் யார்?' என்று சொல்லவா வேண்டும்? மன்மதன்தான்! 'உன்னுடைய பலத்தை நம்பியல்லவா கலகஞ் செய்யத் துணிந்து விட்டான்? தோல்வியையும், நான் தாழ்மைப்பட வேண்டியிருப்பதையும், நீ பார்த்துக் கொண்டிருக்கப் போகிறாயா? உனக்கு எப்படித்தான் மனம் சகிக்குமோ?' என்றெல்லாம் பிதற்றுகிறான்.

சீதையை நோக்கிப் பிதற்றிக்கொண்டிருக்கும் பேதையை இந்தக் கவிதைக் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்கள்:

உலகம் ஒன்றொ(டு)
இரண்(டு)ஒருங்(கு)ஓம்பும்என்
அலகில் செல்வந்(து)
அரசியல் ஆணையில்,
திலக மே!உன்
திறத்(து),அனங் கன்தரு
கலகம் அல்ல(து)
எளிமையும் காண்டியோ?

[உலகம் ஒன்றொடு இரண்டு—உலகம் மூன்றையும். ஓம்பும்—ஆட்சி செய்கிற. அலகில்—எல்லையில்லாத. உன் திறத்து—உன் விஷயமாக. அனங்கன்—மன்மதன். எளிமை—தாழ்மை. வலிமையின்மை-தளர்வு. காண்டியோ—காண்பாயோ.]

சிங்கார வேதாந்தம்

சீதையைத் 'திலகமே!' என்று கொஞ்ச முயன்றவன்,

பூந்தண் வார்குழல்
பொற்கொழுந்தே!

[பூந்தண் வார் குழல்—பூவை அணிந்து குளிர்ந்து ஜில்லென்றிருக்கும் நீண்ட கூந்தல்.]

என்றும் வாய் குளிர அழைக்கிறான். அழைத்துக் காதலோடு வேதாந்தமும் பேசுகிறான்.

'வாளும் இளமையும் வீணாகக் கழிந்து போகின்றனவே; மாண்டவை மீண்டு வருமா?' எனக் கேட்கிறான்:



ஈண்டு நாளும்
  இளமையும் மீண்டில;
மாண்டு மாண்டு
  பிறந்துழலும் மாயைய;
வேண்டும் நாள்வெறி
  தேவிளிந்தால் இனி
யாண்டு (வாழ்வு)?
                அவ்
  இடர் உழல்(று) |
        ஆழ்தியோ?

[ஈண்டு – இங்கே நா ளும்–வாழ்நாளும். மீண் டில – மீண்டு வருவன அல்ல. பிறந்து உழலும்

மாயைய - ஒழிந்து போகின்ற தன்மையுடையன. வேண்டும் நாள்–இன்பம் வேண்டி அனு பவிக்க வேண்டிய காலம். வெறிதே–வீணாகவே. விளிந் தால்– ஒழிந்துபோகுமானல். யாண்டு வாழ்வு–எப்போது



தான் சகவாழ்வோ. அவ் இடர் உழன்று — அந்தப் பெருந் துன்பத்தில் தானே வருந்தி. ஆழ்தியோ — முழுகி விடக் கடவாயோ.]

காமுகனின் வேதாந்தம் இது. இந்த 'வேதாந்தி' தன் உயிரையும் திரணமாய்க் கருதுகிறானும்:

இழவெனக்(கு) உயிர்க்(கு)
எய்தினும் எய்துக!

[இழவு — இழத்தல். எய்தினும் எய்துக — வந்தாலும் வரட்டும்.]

ஆனால் இவன் இறந்து போனால் அழகுக்கு இசைந்த வேறு புருஷரத்தினம் கிடைக்கப் போவதில்லையாம்:

அழகினுக்(கு) இனி
யாருளர் ஆவரோ?

என்று பிரலாபிக்கிறான். எல்லாம் அவளுடைய நன்மைக்காகத்தானும்.

'சீதைக்கு அழகு இருக்கிறது: மனத்திண்மை முதலான நற்குணங்களும் இருக்கின்றன. ஆனால் தலைய தாட்சிண்யம் இல்லையே?' என்று புலம்புகிறான் இந்த வேதாந்தி.

'ஜனக மகாராஜனின் மகா வம்சத்திலே வண்மைக் குணமும் வறண்டு போய்விட்டதா?' என்று அதிசயிக்கிறான்:

வண்மை என்கொல்
சனகரில் மாண்டவா?

[என்கொல் — யாது காரணமோ — சனகரில் — ஜனக வம்சத்திலே — மாண்டவா — மாண்டவாறு — மாண்டு போன வகை.]

இப்படி அருள்நெறியும் வேதாந்தமும் பேசியவன், சீதை தன் கணவனோடு வாழப் போகும் நம்பிக்கையைத் திடமாகக் கொண்டிருக்கிறாள் என்பதையும் ஊகித்துப் பேசுகிறான்.

'உன் புருஷன் செத்துப் போகவில்லை யென்று மனப்பால் குடிக்கிறாயா?' என்று அவளையே கேட்டு விடுகிறான்.

'நல்லது, நான் அவனை வதஞ் செய்த போது, "ஹா ஸீதா! ஹா லக்ஷ்மணா!" என்று அலறிக் கொண்டு சாகவில்லையா உன் கணவன்? அந்தக் குரலை நீ காதாரக் கேட்டிருக்கிறாயே' என்று ஞாபகப் படுத்துகிறான்:

விட்டும் காலத்(து)
அலறிய மெய்க்குரல்
கேட்டும், காண்டற்(கு)
இருத்திகொல், கிள்ளை நீ?

[விட்டும் காலத்து — (நான்) கொன்ற காலத்தில். இருத்திகொல் - இருக்கிறாயோ. கிள்ளை — கிளியே.]

இப்படிக் கொஞ்சும் குரலில் அந்த நெஞ்சு நடுங்கும் செய்தியைச் சீதை காதில் போடுகிறவன், 'அப்பா குதிருக்குள் இல்லை!' என்பது போல, 'அந்தக் குரல் மெய்யான குரல்தான்' என்றும் சத்தியமாகச் சொல்லுகிறான்.

'சீதையின் கணவன் மாண்டு போனான்' என்ற அந்தச் செய்தியால், அவள் 'ஐயோ என் தலைவிதி!' என்று புலம்பக் கூடுமே. எனவே, நல் விதி தான் அவனைத் தன்னிடம் சேர்த்திருக்க வேண்டும் என்றும், அந்த நல் விதிப் பயனை அவமதித்து அவன் தன்னை உபேட்சிப்பது சரியல்ல என்றும் பிதற்றுகிறான்.

காதல் உலகில் வேதாந்தமும் அதிசயமாய்த் தானிருக்கிறது!

சரணாகதியும்தான்

'ராவண் மகாராஜ்யத்திலே மாட்சிமை தங்கிய மகாராணி பதவியைத் தேடிக்கொள்ளலாமே சீதை யென்று' வேதாந்தி லௌகிக லாபத்தையும் காட்டுகிறான்.

அந்தத் தனிப் பெரும் பதவியைத் தான் எவ்வளவு விளக்கமாய்ச் சித்திரிக்கிறான்!

தேவர் தேவியர்
  சேவடி கைதொழும்
தாவில் மூவுல
  கின்நனி நாயகம்,
மேவு கின்றது
  நுன்கண்! விலக்கினை;
யாவர் ஏழையர்
  நின்னின் இலங்கிழாய்?

[சேவடி – சிவந்த பாதம். தாவில் – அழிவில்லாத. மேவுகின்றது – வந்து அடைகிறது. நுன்கண் – உன்னிடத்திலே. நின்னின் – உன்போல. இலங்கிழாய் – (இங்கு) பெண்ணே.]

'வலுவிலே வரும் ராஜ்ய லட்சுமியை, வேண்டாமென்று விலக்குகிற உன்னைப் போல் ஏழை யார் இருக்கிறார், அடி பைத்தியமே!' என்ற பேச்சில் காமப் பைத்தியம் எத்தகைய உச்ச நிலைக்குப் போய் விடுகிறது பாருங்கள்!

இனி இப்பேர்ப்பட்ட சக்ரவர்த்தினி யாகி முடிசூட்டி வைப்பது கூடப் பரிபூர்ண திருப்தி அளிக்க வில்லையாம் இந்த இதயத்திற்கு.

முடிசூடும் சீதையின் அடி சூடும் அரசையே விரும்புகிறானாம் ராவணன்.

அரசமர்ந்தான் அடி சூடும்
  அரசை அல்லால்
அரசாக எண்ணேன்மற்(று)
  அரசு தானே!

என்று குலசேகராழ்வார் இறைவனது அடிசூடும் அரசைத்தானே விரும்பினார்? ராமபக்தியும், காமப்பித்தும் — போற்றத் தக்கதும் தூற்றத் தக்கதும் — எப்படிச் சந்திக்கின்றன பாருங்கள்!

தன் மகா ராஜ்யத்தோடு தன்னையும் அடிமை கொண்டருள வேண்டும் என்ற ராவணனின் உறுதியான பிரார்த்தனையைக் கேளுங்கள்:

'குடிமை மூன்றுல
  கும்செயும் கொற்றந்(து)என்
அடிமை கோடி
  அருளுதி யால்!'என,
முடியின் மீது
  முகிழ்ந்(து)உயர் கையினன்,
படியின் மேல்விழுந்-
  தான்,பழி பார்க்கலான்.

[குடிமை – குடியாகும் தன்மை. கொற்றம் – வெற்றி. கோடி – கொள். என – என்று. முகிழ்த்து – குவித்து.]

வேதாந்த ஞானத்தின் உச்ச நிலையிலும் சரணாகதி செய்யத்தான் தோன்றும் என்பர் பக்தர். காமப் பைத்தியத்தின் உச்சநிலையிலும் ராவணன் காலில் விழுகிறான். புகழத் தக்கதும் இகழத் தக்கதும் எதிர்பாராத நிலையில் ஒத்துப் போகின்றன!

சுந்தர ராமாயணம்



பி.ஸ்ரீ

435.

யார் ஏழை?

'நாராசம் காய்ச்சி நடுச் செவியில் வைத்த மாதிரி' என்று சொல்வதுண்டு சாதாரணமாக. சீதை காதுகளுக்கு ராவணனுடைய வார்த்தைகள் எப்படியிருந்தன என்று சொல்லும்போது, கவிஞனும் அந்த வசனத்தை நினைத்துப் பார்த்தான்.

இவளா ஏழை?

அந்தப் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பிகளை அப்படியே பயங்கரமாய்க் காட்டுவது போல,

காய்ந்தன சலாகை
அன்ன உரைவந்து
கதுவா முன்னம்

[சலாகை – நாராசம். கதுவா முன்னம் – நுழைவதற்கு முன்னமே.]

என்று ஒரு சப்தஜாலம் செய்து காட்டுகிறான் கவிஞன்.

அந்த நாராசக் கம்பிகள் காதில் நுழைந்து விடவில்லையாம். அதற்கு முன்பே அவை காதுகளைப் போசுக்கி விட்டனவாம். ஆம்; அந்தக் கொடுமையான வார்த்தைகளைச் சரியாகக் கூட இவள் வாங்கிக் கொள்ளவில்லை.

எனினும் செவியும் சிந்தையும் கண்ணும் படும் பாட்டைப் பாருங்கள்:

காய்ந்தன சலாகை
அன்ன உரைவந்து
கதுவா முன்னம்,

தீய்ந்தன செவிகள்;
உள்ளம் திரிந்தது;
சிவந்த சோரி
பாய்ந்தன கண்கள்;
ஒன்றும் பரிந்தி
லள்
உயிர்க்கும்;
பெண்மைக்(கு)
ஏய்ந்தன அல்ல
வெய்ய மாற்றங்கள்
இனைய சொன்னாள்.

[திரிந்தது – திரும்பி வேறுபட்டது. சோரி – இரத்தம். பரிந்திலள் – அவள் இரக்கப் படவில்லை; அன்பு காட்டவில்லை. ஏய்ந்தன – இசைந்தன. வெய்ய – கொடிய. மாற்றங்கள் – சொற்கள். இனைய – இத்தகைய.]

'கலை இளம் பிணையெனக் கரைந்தாள்' என்றும், 'கூசி ஆவி குலைவுறு வாளையும்' என்றும் சற்று முன்பு காட்டப்பெற்ற அந்தச் சீதைதானா இவள்? நன்றாகப் பாருங்கள்.

அரக்கன் முகத்தை நேரில் பார்த்துப் பேசாமல் கீழே கிடந்த ஒரு துரும்பை எடுத்து இடையே போட்டுக்கொண்டு பேசுவதாக வால்மீகம் கூறுகிறது. சீதை ராவணனைத் துரும்பாக மதித்துப் பேசலுற்றாள் என்பது குறிப்பு. வேறு பல உட்பொருள்களும் விரிவாய்க் கூறுவதுண்டு.

கம்பனிலும் இக்கருத்துள்ள பாட்டு ஒன்று காணப்படுகிறது. வால்மீகியின் 'உரையின்படி'யே கம்பன் ராமாயணம் பாடினான் என்பதை மெய்ப்பிக்கத்தான் இப்படி ஒரு பாட்டு இடையே செருகப் பட்டிருக்கிறதென்றுதான் சொல்ல வேண்டும்.

ராவணனுடைய வார்த்தைகளைக் கேட்டுச் சீதை நடுநடுங்கிக் குரல் ஒடுங்கி அழுது கொண்டே ஒரு துரும்பை இடையில் கிள்ளிப் போட்டுப் புன்சிரிப்புடன் பதில் உரைத்தாள் என்பது வால்மீகி வாக்கு. கம்பன் கவிதையிலோ, அழுது சிவந்திருந்த கண்கள் இப்போது கோபத்தால் இரத்தம் சொட்டுவது போலச் சிவந்து காண்கின்றன. பெண்மைக்கு இசையாத கொடிய வார்த்தைகளைக் கொட்டப் போகிருள், ஆவேசம் வந்தவள் போல.

ராவணனை அற்பத் துரும்பாக மதிக்கிருள் என்பதைக் 'காய்ந்தனை சலாதை' என்று தொடங்கும் பாட்டிலும், 'மேருவை உருவல் வேண்டின்' என்று தொடங்கும் பாட்டிலுமே கண்டு விடுகிறோம். மற்றப்படி துரும்பிற்கு ஒரு பாட்டு இங்கே மிகை தான். இதோ கேளுங்கள், கோப அலைகளைக் கோஷத்தோடு தாக்கி ராவண பராக்கிரமத்தைத் துச்சமாகக் காட்டும் வீர வாசகத்தை:

மேருவை உருவல்
வேண்டின், விண்பிளந்(து)
ஏகல் வேண்டின்,
ஈரேழு புவனம்
யாவும் முற்றுவித்
திடுதல் வேண்டின்,
ஆரியன் பகழி
வல்ல(து); அறிந்திருந்(து)
அறிவி லாதாய்!
சீரிய அல்ல
சொல்லி நலைபத்தும்
சிந்து வாயோ?



[உருவல் – துளைத்தல். விண் – வானம். ஏகல் – (அப்புறம்) செல்வது. புவனம் – லோகங்கள். முற்றுவித்திடுதல் — முடித்து விடுதல். ஆரியன் – பெரியோன்; (இங்கே) ராமன். பகழி – பாணம். சீரிய அல்ல – சிறப்பில்லாத சொற்கள்.]

'வல்லாளனுக்கும் ஒரு வல்லாளன் உண்டு' என்பதை மனத்தில் உறைக்கும்படி பேசுகிருள். அவன் சந்யாசியாக வந்து வஞ்சித்த போது தன்னுடைய ராட்சஸ பலத்தைக் குறித்துப் பேசியது இப்போது இவள் நினைவிற்கு வருகிறது.

அந்தக் காலத்தில் அவன் மமதை கொண்டு பேசிய வீரம் இது:

'மேருவைப் பறிக்க
வேண்டின், விண்ணினை
இடிக்க வேண்டின்,
நீரினைக் கலக்க
வேண்டின், நெருப்பினை
அவிக்க வேண்டின்;
பாரினை எடுக்க
வேண்டின், பலவினை -
சிலசொல் ஏழாய்!
யாரெனக் கருதிச்
சொன்னாய்? இராவணற்(கு)
அரிதென்?' என்றான்.

[பார் – பூமி. ஏழாய் – ஏழையாகிய பெண்ணே. அரிது என் – அரியது என்னதான் இருக்க முடியும்?]

அந்த ராவண மமதைக்குப் புரியக் கூடிய அதே பாஷையில் பேசுகிருள் சீதை இப்போது. பத்துத்தலை, இருபது தோள் என்றால் பயன் யாருக்கு - ராவணனுக்கா? ராமபாணத்திற்கு இலக்காகும் சித்திரக் குறிகளல்லவா? — என்றும் கூறுகிருள்.

ராமபாணம் போன்ற வார்த்தை

இலக்காகப் பொருள்களைச் சித்திரத்தில் எழுதி வைத்துக் கொண்டு அரசிளங்குமரர்கள் விளையாட்டாகக் குறிவைத்து அம்பு போட்டுப் பழகுவார்களாம். 'அத்தகைய சித்திர இலக்குகள் அப்பா உன் தலைகளும்

தோள்களும், தசரத ராஜ குமாரருக்கு, எனது வில் விருக்கு!' என்கிருன்:

பத்துள தலையும்
தோளும் பலபல
பகழி தூவி,
வித்தக வில்லி —
ஞற்குந் திருவினை
யாடற்(கு) ஏற்ற
சித்திர இலக்கம்
ஆகும் அல்லது,
செருவில் ஏற்கும்
சத்தியை போறும்?
மேனுள் சடாயுவால்
தரையின் விழ்ந்தாய்!

[வித்தகம் - சாமர்த்தியம். இலக்கம் - லட்சியப் பொருள்: குறி. செருவில் - போரில். சத்தியை - சக்தியுள்ளவனுவாய்.]

தலைகள், தோள்கள் மட்டுமா?—ராவணன் பெற்றிருக்கும் வரங்களும் தவிடு பொடியாகி விடுமாம் ராமபாணத்தினுலே. ராவணனுடைய தேக பலம், ஆயுத பலம், மாயா பலம் மட்டுமா?—அவனுக்கு வரங்கொடுத்த பிரம்மதேவன் முதலானவர்களின் வார்த்தைகளும் அழிக்கப்படுமாம் ராமனுடைய அம்புகளால்:

பெற்றுடை வரனும்
நாளும், பிறந்துடை
உரனும், பின்னும்
மற்றுடை எவையும்
தந்த மலரயன்
முதலோர் வார்த்தை,
வில் - தொடை இராமன்
கோத்து விடுதலும்,
விலக்கண்(டு) எல்லாம்
இற்(று)இடைந்(து) இறுதல்
மெய்யே: விளக்கின்முன்
இருள்உண் டாமோ?

[பெற்றுடை - நீ பெற்றுள்ள. வரன் - வரம். நாள் - வாழ்நாள். பிறந்துடை உரன் - உன்னிடம் உண்டாயிருக்கும் பலம். மற்றுடை எவையும் — நீ அடைந்துள்ள மற்ற ஆயுத பலம், மாயா பலம் முதலியனவைகளும். மலர் அயன் - தாமரை மலரில் வாழும் பிரம்மதேவன். வில்தொடை' கோத்து—வில்லில் அம்பைத் தொடுத்து. இற்று - துண்டாகி. இடைந்து - பின்வாங்கி. இறுதல் - அழிதல்.]

பிரம்மதேவன் முதலானவர்களின் வார்த்தைகளும் வரப்பிரசாதங்களும் ராம



பாணத்தால் தவிடு பொடியாகும் என்பதற்கு ஒரு சான்றும் காட்டுகிருன், சிவதனுசு அன்று முறிந்து விழுந்ததே என்று.

சிவபெருமானையும் ராவணன் தனக்குச் சமானமாகவே மதித்திருப்பவன். சில சமயங்களில் 'பரமேச்வரனுக்கு ராவணேச்வரன் மேலானவன்!' என்று தானே நம்பியிருப்பது போலவும் பேசித் தீர்த்து விடுவான். எனவே, சிதை ராவணனுக்கு நினைப்பூட்டுகிருள்; 'கயிலையை எடுத்தபோது பரமேச்வரனுடைய கால் விரலால் நசுக்கப்பட்ட தலைகளும் தோள்களும் தானே!' என்று.

வெற்றி கால் விரலுக்கா,
பத்துத் தலைகளுக்கா?

இந்த வரலாற்றை ராவணன் ஒப்புக்கொள்வதில்லை. ராவண பக்தர்களான அரக்கர்களும், ராஜ பக்தர்களான அடிமைத் தேவர்களும் கூட ஒப்புக்கொள்வதில்லை. கயிலையைப் புரட்டிச் சிவபெருமானுக்கே முதுகுக்கு மண் காட்டி விட்டதாகத் தான் ராவணுதி ராட்சஸர்கள் புரட்டிக் கூறுகிருர்கள் சரித்திரத்தை!

இந்த நிலையில் பரமேச்வரனது கால் விரலே கர்வபங்கம் செய்து விட்டது என்பதை ஞாபகப்படுத்தி, அந்தப் பரமேச்வரன் திரிபுர ஸம்ஹாரம் செய்யக் காரணமாக இருந்த சிவதனுசு இற்று விழுந்த கதையையும் காதில் போடுகிருள்;

குன்றுநீ எடுத்த
நாள்நன் சேவடிக்
கொழுந்தால் உன்னை

வென்றவன் புரங்கள்
வேவத் தனிச்சரம்
துரந்த மேரு,

என்துணைக் கணவன்
ஆற்றற்(கு) உரன்இலா(து)
இற்று வீழ்ந்த

அன்றொழுந் துயர்ந்த
ஓசை கேட்டிலை
போலும் ஐயா!

[குன்று-(இங்கே) கயிலை. சேவடிக் கொழுந்தால்-சிவந்த பாதங்களின் விரலால். புரங்கள்-திரிபுரங்கள். வேவ-பற்றி எரியும்படி. தனிச்சரம் துரந்த மேரு-ஒப்பில்லாத பாணத்தை விடுவதற்கு இடமாகியிருந்த சிவதனுசு. என் துணைக் கணவன் ஆற்றற்கு-எனது வாழ்க்கைத் துணைவனான கணவனது வலிமைக்கு. உரன் இலாது-ஏற்ற வலிமை இல்லாமல். இற்று-முறிந்து. கேட்டிலை போலும்-நீ கேட்கவில்லை போலும்.]

இவ்விதமாகப் பேசுகிறவள், கயிலை மலையைப் பெயர்த்தெடுத்து விட்டதாகக் கூறும் அந்தப் புரட்டுக் கூற்றையும் குறிப்பிட்டுப் பரிகசிக்கிறாள். 'வில்லும் தோளுமாய்த் தம்பி காவல் செய்து கொண்டிருந்த போதாவது நீ முகங் காட்டத் துணிந்ததுண்டா? அப்படிப்பட்ட நீ வீண் பெருமை பேசுகிறாயே!' என்று அந்த மோசக் கதையையும் ஞாபகப் படுத்துகிறாள்.

'இன்னமும் ஆண்பிள்ளை போலத் தலை தூக்கிக் கொண்டு பெண்கள் காலில் விழுகிறாயே, இதுவோ வீரம்?' என்கிறாள்:

மலைஎடுத்(து), எண்திசை
காக்கும் மாக்களை
நிலைகெடுத் தேன்எனும்
மாற்றம் நேருநீ,

சிலைஎடுத்(து) இளையவன்
நிற்கச் சேர்ந்திலை,
தலைஎடுத்(து) இன்னமும்
மகளிர்த் தாழ்தியோ?

[மலை - கயிலைமலை. மாக்களை - (இங்கே) திக்கஜங்களை. மாற்றம் - வார்த்தை. நேரும் - (இங்கே) சொல்லத் துணியும். சிலை - வில். இளையவன்- லட்சுமணன். மகளிர்த் தாழ்தியோ- பெண்களுக்குத் தலை தாழ்கின்றாயோ.]

'ஏழை நீ'

ராவணனுடைய இந்த இருப்பிடம் இவளுடைய கணவனுக்குத் தெரியாமலிருப்பது தான் இந்த ராவண ராஜ்யம் அழியாமலிருக்கக் காரணம் என்கிறாள். அப்படிச் சொல்லும்போது 'இருப்பிடம்' என்று சொல்லாமல் 'ஒளிப்பிடம்' என்று குறிப்பிடுகிறாள்.

மகாராணி பதவியைச் சீதை மறுக்கிறாளே யென்று, 'உன்னைவிட ஏழை யார்?' என்றான் ராவணன். விசேஷமாக 'அறிவில்லாதவள்' என்ற பொருளிலும்தான் அப்படிச் சொன்னான். இப்போது சீதை ராவணனையே 'ஏழை!' என்று அழைக்கிறாள்.

'ஏழையே, உன் ஒளிப்பிடத்தை என் தலைவன் அறிந்ததும் இந்தக் கடலும் ராட்சஸ பூமியும் பிழைத்திருக்க முடியுமா?' என்கிறாள்.

இப்படி ஒரு தரம் ராவணனை 'ஏழை' என்று அழைத்ததுடன் திருப்தியடையாதவள்போல்,

செங்கண்மால் நான்முகன்
சிவன்என் றேகொலோ
எங்கள்நா யகனையும்
நினைந்த(து) ஏழைநீ?

[செங்கண்மால் - விஷ்ணு. நான்முகன் - பிரம்மதேவன்.]


என்று மீண்டும் ஒரு கேள்வி போட்டு மகா மமதை கொண்ட அரக்கர்கோனையும் திகைக்க வைக்கிறாள்.

* * *

இந்தப் பகுதியில் சீதை அபலையாகப் பேசவில்லை; சொல்லினால் சுடுவது போலப் பேசுகிறாள். தர்மாவேசங் கொண்ட வீரபத்தினியாகப் பேசுகிறாள். வால்மீகி கண்டு காட்டும் சீதை ராவணனைத் துரும்பு போலக் கருதிய போதிலும் அறநெறி காட்டி இதோபதேசம் செய்யும் தோரணையில் பேசுகிறாள். இரு அறத் துறைக்கும் வேற்றுமை யுண்டு என்பதை இரண்டு சித்திரங்களையும் ஒப்பு நோக்குவோர் உணர்ந்து கொள்வார்கள்.

செய்யுள்களின் ஓசைப் பொலிவிலேயே, சப்த ஜாலங்களின் வசீகர வன்மையிலேயே, கம்பனது பகற்கனவிலே காணும் சீதையை ரஸிகர்கள் கண்டு கொள்ளலாம்.

சுந்தர ராமாயணம்



பி.ஸ்ரீ

436.

கோபம் இசை பாடுகிறது

‘திரிலோக ஸாம்ராஜ்யத்தையும் என்னையும் அடிமை கொள்ளத்தக்க அந்தப் பெரும் பதவியை, அந்தத் தனிப் பெருஞ் செல்வத்தை வேண்டாமென்று விலக்குகிறாயே, உன்னைவிட ஏழை யார்?’ என்று ராவணன் சீதையை ‘ஏழை’யாக்கி ஒரு தடவை பேசிவிட்டானல்லவா? இவளைக் கவர்ந்து வரும் சந்தர்ப்பத்திலும் ‘ஏழாய்!’ என்று அழைத்து விட்டான்.

சீதை விடை கூறும்போது, ‘நானல்ல ஏழை; நீ தான் ஏழை!’ என்றாள். மூன்று தடவை ராவணேச்வரனை ஏழையாகக் காட்டுகிறாள் ஆவேசத்துடன்.

தான் விடை கூறிய அந்த வீரத் தமிழிலே, கோழையாகவும் குறிப்பிட்டாள். உண்மையில், தர்ம வீரம் தானே வீரம்?

ராமபாணத்தின் வல்லமையை அறிந்திருந்தும் அறிவில்லாமல் நடந்து கொண்டு இப்போ ஒளிந்துகிடப்பதால் ‘ஏழை’ என்றாள்.

‘என் தலைவனாகிய ராமபிரானை உன் அதிக்கிரமச் செயல்களுக்கு அஞ்சியவர் போலிருக்கும் மும்மூர்த்திகளில் ஒரு மூர்த்தியைப் போல் அவ்வளவு சாமானியமாக நினைத்து விட்டாயே; ஆதலால் நீ அறிவில் ஏழை’ என்று ஏழைமையை மறுபடியும் வற்புறுத்தினாள்.

மூன்றாம் தடவையாக, ‘நீ தவ வலிமையால் பெற்றிருக்கும் செல்வங்களையெல்லாம் இழக்கப் போகிறாயே அறநெறி தவறி நடப்பதால், ஆதலால் நீ ஏழை’ என்கிறாள்:

> தப்புதி அறத்தை
> ஏழாய்! தருமத்தைக்
> காமி யாயோ?

[தப்புதி—தப்பி நடக்கிறாயே. காமியாயோ—விரும்பாயோ.]

சீதையின் கர்த்தவ்யம்

இப்படியெல்லாம் சீதை ஏழையாக்கிப் பேசினாலும் பிரதாப லங்கேச்வரனல்லவா? வீரப் பிரதாபம்தான் கொஞ்சமோ? தோல்வி அறியாத வெற்றி வீரனல்லவா?

என்றாலும் இந்த மகத்தான ராவண வீரத்திற்கு உள்ளே உயிரில்லை, என்கிறாள். ஈரமுமில்லை, வீரமுமில்லை என்கிறாள்.

இதைத்தான் எத்தகைய அரும் பெருங் கொள்கையாக, எத்தகைய அஹிம்ஸா தர்ம — சத்தியாக்கிரக சாஸனமாய்க் காட்டுகிறாள், பாருங்கள்:

> மறம்திறம் பாத
> தோலா வலியினர்
> எனினும், மாண்டார்,
> அறம்திறம் பினரும்
> மக்கட்(கு) அருள்திறம் —
> பினரும் அன்றே!

[மறம் – வீர பராக்கிரமம். திறம் பாத – வழுவாத. தோலா – தோல்வியடையாத. வலியினர் – பலமுள்ளவர். அறம் திறம்பினரும்—அறநெறி தவறியவர்களும். மக்கட்கு - மனிதர்கள் விஷயத்தில். அருள் திறம்பினரும் அன்றே—அருள்நெறி தவறியவர்களும் அல்லவா?]

அஹிம்ஸா தர்ம நெறியிலிருந்து திறம்பியவர் எத்தகைய சக்ரவர்த்தியானாலும் சர்வாதிகாரியானாலும் மகா பலசாலியானாலும் அவர்கள் மாண்டவர்



களே! உயிரோ டிருக்கும்போதே, வன்மையோடு வாழும்போதே, வாழ்பவரல்லர், செத்தவர்களே! இது சீதையின் காரியம்.

ஆனால் காரியத்தை ஹிட்லர் ஒப்புக்கொண்டாரா? முஸோலினி நம்பினரா? சீதையின் அஹிம்ஸா தர்ம சித்தாந்தத்தை ராவணனும் காதில் வாங்கிக்கொள்ளவில்லை – அந்த இருபது செவிகளில் ஒன்றிலாவது! ராவணனுக்குப் புரியாத பாஷையல்லவா?

தர்ம கோபம்

தர்மாவேசம் பொங்குகிறது கோபாவேசமாக. ராவணனுக்கு விளங்கும் பாஷையை மறுபடியும் உபயோகித்துப் பார்க்கிறாள்:

உன்னையும் கேட்டு,
மற்(று) உன் ஊற்றமும்,
உடைய நாளும்,
பின்னை இவ் வரக்கர்
சேனைப் பெருமையும்
முனிவர் பேணிச்
சொன்னபின், உங்கை
மூக்கும், உம்பியர்
தோளும் தாளும்
சின்னபின் னங்கள்
செய்த அதனை நீ
சிந்தி யாயோ?

[உன்னையும் கேட்டு – (இங்கே) உன்னைப் பற்றித் தண்டகாரணிய வாசிகளான முனிவர்கள் சொன்னதைக் கேள்வியுற்ற பின்பும். உன் ஊற்றமும் – உனது வலிமையும். உடைய நாளும் – நீ பெற்றுள்ள ஆயுள் வலிமையையும். பின்னை – பின்னையும். இவ் 'அரக்கர் சேனைப் பெருமையும் – இந்த அரக்கர்களுடைய சேனையின் பெருக்கத்தையும். முனிவர் – அந்தத் தண்டகாரணிய முனிவர்கள். பேணிச் சொன்ன பின் – விரும்பிச் சொன்ன பின்பும். உங்கை – உன் தங்கையாகிய சூர்ப்பனகையின். உம்பியர் – உனது தம்பிமார்களாகிய கரன் முதலியோர். தோளும் தாளும் – தோள்களையும் கால்களையும். சின்ன பின்னங்கள் செய்த – துண்டு துண்டாக வெட்டித் தள்ளிய. அதனை – அந்தச் செய்தியை. சிந்தியாயோ – நினைத்துப் பார்க்க மாட்டாயோ.]

அந்தத் தோல்விக் கதை

மேலே மேலே பொங்குகிறது சீதை கோபமாகிய தர்மாவேசம். அன்று ராவண சந்யாசிக்கு ஞாபகப் படுத்தினாளே அந்த ஆயிரம் தோளனாகிய கார்த்த வீரியார்ச்சுனன் கதையை, இன்னும் ஞாபகப் படுத்துகிறாள்.

அந்த அர்ச்சுனனை அன்று நினைப்பூட்டியபோதே அந்தச் சாமியாருக்கு எவ்வளவோ அவமானமாகத் தோன்றியது.

கார்த்த வீரியன் கதை கேட்டதும் வெகுளி பொங்கிச் சந்நியாசி வேஷம் நழுவி விட்டது. பல தலைப் பாம்பு படங்களை விரித்துச் சீறி யெழுவது போலச் சீறி எதிர் நின்றான் அன்று.

அன்று சொன்ன அந்தக் கதையில் 'இலங்கை வேந்தைச் சிறை வைத்த கழற்கால் வீரன்' என்றுதான் ஞாபகப் படுத்தினாள் அந்த வீரனை.

இன்றோ,

ஆயிரம் தடக்கை—
யான், நின் ஐந்நான்கு
கரமும் பற்றி
வாய்வழி குருதி
சோரக் குத்தி, வான்
சிறையில் வைத்த
தூயவன்

[தடக்கையான்-பெரிய கைகளையுடையவன். நின் ஐந்நான்கு கரமும் பற்றி – உன்னுடைய இருபது கைகளையும் பிடித்துக் கொண்டு. வாய் வழி குருதி சோர-நீ வாயின் வழியாக இரத்தம் கக்கும்படி. வான் சிறையில் – பெரிய சிறையிலே. தூயவன்-சுத்த வீரனான கார்த்த வீரியன்.]

என்று அந்த ஞாபகத்தை எத்தகைய விவரத்துடன் எவ்வளவு கொடுமையாகக் கிளறி விடுகிறான்!

இருபது கைகளையும் பற்றிக்கொண்டு, அந்த ஆயிரம் கையன், முதுகிலே ஒரு குத்துவிட்டு ஒரு சிறைச்சாலைக்குள் தள்ளிவிட்டானாம். இரத்தம் கக்கிக் கொண்டே அந்தச் சிறைக்குள் போய் விழுந்தானாம் ராவணன்.

தனக்கு வஞ்சனை செய்த ராவணனோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அந்த மாடனும் தூயவன் என்று தீர்மானிக்கிறாள்.

கார்த்த வீரியனுடைய வைரம் பாய்ந்த அந்தத் தோள்களை வெட்டித் தள்ளிய பரசுராம பராக்கிரமத்தை அன்று ஞாபகப்படுத்தினான் விரிவாக. இன்றும் ஞாபகப்படுத்துகிறாள் சுருக்கமாக, 'வயிரத் தோள்கள் துணித்தவன்' என்று.

அன்றே,

'திரண்டதோள் வனத்தை
யெல்லாம் சிறியதோர்
பருவம் தன்னில்
இரண்டுதோள் ஒருவன்
அன்றோ மழுவினால்
எறிந்தான்?' என்றாள்.

இப்படிப் பரசுராம பராக்கிரமம் பேசியவள் அந்தப் பரசுராமனையும் வலி தொலைத்தவன் என்று தன் கணவனாற்றலைச் சொல்லாமலே உய்த்துணர விட்டு வைத்தாள்.

இப்போதோ,

தூயவன் வயிரத்
தோள்கள் துணித்தவன்
தொலைந்த மாற்றம்
நீஅறிந் திலையோ?

[தூயவன் - சுத்த வீரனான அந்தக் கார்த்த வீரியனுடைய. வயிரத் தோள்கள் - வயிரம் பாய்ந்த, அதாவது மிக்க வலிமை வாய்ந்த தோள்களை. துணித்தவன் - வெட்டித் தள்ளிய பரசுராமன். தொலைந்த மாற்றம் - தோற்று வலியழிந்த செய்தியை. அறிந்திலையோ - நீ கேள்விப்படவில்லையா?].

இப்படிக் குறிப்பாக ராம பராக்கிரமத்தையும் வற்புறுத்திய பின்,

ஏகும் நெறியறிந்—
திலாத நீசா!

[ஏகும் நெறி — செல்ல வேண்டிய வழி. அறிந்திலாத — அறிந்திராத.]



என்று முடிகிறது இந்தப் பாட்டு.

இனி இப்பாட்டின் முழு உருவத்தையும் ஒரு சேரப் பார்ப்பது நல்லது:

ஆயிரம் தடக்கை—
யான், நின் ஐந்நான்கு
கரமும் பற்றி,

வாய்வழி குருதி
சோரக் குந்தி, வான்
சிறையில் வைத்த

தூயவன், வயிரத்
தோள்கள் துணித்தவன்,
தொலைந்த மாற்றம்

நீ அறிந் திலையோ?
ஏதும் நெறி அறிந்—
திலாத நீசா!

* * •

தென்றல் போல் இனிமையானது தமிழ் என்று பெருமை கொள்கிறோம். ஆனால் இங்கே மந்தமாருதம் சண்டமாருதமாய் வீசக் காண்கிறோம்.

'அமிழ்தினும் இனிது தமிழ் மொழி' என்கிறோம். இங்கே கள்வெறி போலப் பொங்கி விடுகிறது கோபவெறி. தீயின் உக்கிரத்தையும் உணர்கிறோம் இந்தக் கோபத்திலே.

தமிழ்க் கவிதை குறித்துப் பாரதியார் ஆனந்தக் களிப்புடன் தமிழ்த் தாயின் கூற்றாக,

கள்ளையும் தீயையும் சேர்த்து
— நல்ல
காற்றையும் வான வெளியை
யும் சேர்த்துத்
தெள்ளு தமிழ்ப்புல வோர்கள்
— பல
தீஞ்சுவைக் காவியஞ் செய்து
கொடுத்தார்

என்று பாடியிருக்கிறாரல்லவா!

பாரதி வாக்கைக் கொஞ்சம் மாற்றி,

கள்ளையும் தீயையும் சேர்த்துப்
— புயற்
காற்றையும் வான ஒளியை
யும் சேர்த்துக்

கம்பன் சீதையின் கோபாவேசக் கவிதையைச் செய்து கொடுத்திருப்பதாகக் கருதலாம்.

* • *

இசைமயமாக இயங்குவது கவிதை என்கிறோம். ஆனால் இந்தப் பாட்டிலே இடி தாளம் போடக் கோப தேவதை இசை பாடுகிறது.


கவிதையை ஒருவகைக் கனவென்றும், ஒரு குணசித்திரம் என்றும், இசைமயமாக வெளிப்படும் ஒரு பெரிய அல்லது சிறிய அனுபவக் காட்சி என்றும் இர்வின் எட்மன் (Irwin Edman) என்ற ஆசிரியர் 'கலைகளும் மனிதனும்' என்ற தம் நூலில் கூறியுள்ளார்.

சீதையின் இந்தக் கோப சித்திரமும் கம்பனுக்குப் பகற்கனவிலே இவளுடைய சங்கீத சரஸ்வதி வழங்கியதுதான்.

கம்பன் கண்ட 'சீதை கோபம்' என்ற கனவுக்குச் சாகாவரம் கிடைத்து விட்டது.

ஆம், அனுமனுக்குச் சீதாதேவியின் அருளால் கிடைக்கப்போகும் சிரஞ்சீவி-வரம் இந்தக் கோபத் துணுக்கிற்கும் கவிதா தேவியின் அருளால் கிடைத்து விடுகிறது.

சுந்தர ராமாயணம்



437.

கோபமும் காதலும்

பி. ஸ்ரீ

பூமாலையும் பாம்பாகக் கண்டாள் சீதை அந்த நாளிலே, சந்நியாசி மறைந்து ராவணன் கண்முன் நின்றதும். அன்றே அந்த ராவண உயர்வு, நீ விஷம் கொண்ட பத்துத் தலைப் பாம்பொன்று சீறிப் படம் விரித்து உயர்ந்ததுபோலத் தோற்றமளித்தது.

அன்றும் மனோதைரியத்துடன் அதட்டிப் பார்த்தாள் அந்தக் கொடிய பாம்பை. இன்று அதட்டலின் சிகரத்தைக் காண்கிறோம்:

கடிக்கும்வாள் அரவும்
கேட்கும் மந்திரம்;
களிக்கின் றேயை
அடுக்கும்ச(து) அடா(து)என்(று)
ஆன்ற ஏதுவோ(டு)
அறிவு காட்டி
இடிக்குநர் இல்லை;
நீயே எண்ணிய(து)
எண்ணி உன்னை
முடிக்கின்ற போது,
முன்னின், முடிவன்றி
முடிவ துண்டோ?

[வாள் அரவும் – கொடிய பாம்பும். களிக்கின்றேயை – மதோன்மத்தனுப் களித்துத் திரிகின்ற உன்னை. ஈது-இது. அடாது என்று – இது தகாது என்று. ஆன்ற – சிறந்த. ஏதுவோடு – காரணத்தோடு. அறிவு காட்டி இடிக்குநர் – இடித்து அறிவு காட்டுகிறவர். நீயே எண்ணியது எண்ணி - நீ உன் மனம் போன போக்கெல்லாம் போய்ப் போய். உன்னை முடிக்கின்றபோது - நீயே உன்னை முடித்துக் கொள்ளும் போது. முன்னின் – ஆலோசித்துப் பார்த்தால். முடிவு அன்றி முடிவதுண்டோ–முடிவு அல்லது நாசம் வந்து விடுமேயல்லாமல் வேறு விதமாக முடிவதுண்டோ? இச்செய்யுளில் 'மந்திரம்' என்பது மறைமொழியாகிய மந்திரத்துடன் மந்திராலோசனையையும் குறிக்கும்.]

சீதையின் வீரத் தமிழுக்குச் சிகரமாய் அமைந்திருக்கும் இச் செய்யுள் தமிழன்னையின் முடிமணியாகிய திருக்குறள் மயமாயிருப்பது கவனிக்கத் தக்கது.

இடிப்பாரை இல்லாத
ஏமரு மன்னன்
கெடுப்பார் இலானும்
கெடும்

[இடிப்பாரை-இடித்து அறிவு புகட்ட வல்லவர்களை. இல்லாத ஏமரு மன்னன் – தனக்குத் துணையாகப் பெற்றிராத காவலற்ற அரசன். கெடுப்பார் இலானும் – பகையாய்க் கெடுப்பவர் எவரும் இல்லாதிருந்தாலும். கெடும் – தானே கெடுவான்.]

என்னும் குறள் பளிச்சென்று நினைவுக்கு வருகிறது.

இதற்கு முன்னுள்ள குறள் மணியும் ஒளி வீசி எழுகின்றது நம் மனக்கண் முன்பு:

இடிக்கும் துணையாரை
ஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமை
யவர்?

[இடிக்கும் துணையாரை – நெருங்கிச் சென்று இடித்து அறிவு புகட்டி உதவுகிறவர்களை. ஆள்வாரை – 'இவர் நமக்குத் துணைவர்' எனக்கொண்டு ஆளுகிற அரசரை. தலைமையவர் – ஆற்றலையுடையவர்.]

இப்படிப் பெரியாரைத் துணைக் கொள்ள வேணும், நல்லறிஞர்களான அமைச்சர்களைத் துணைக் கொள்ள வேணும் என்று சொல்லுகிற திருவள்ளுவர் நண்பர்களுடைய கடமையை நினைப்பூட்டும் போது:

நகுதற் பொருட்டன்று;
நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென்(று) இடித்தற்
பொருட்டு

[நகுதற் பொருட்டு அன்று – சிரிக்கச் சிரிக்கப் பேசிச் சிரித்துக்கொண்டிருக்கும் பொருட்டு அன்று. நட்டல் – சிநேகம் செய்தல். மிகுதிக்கண் — தவறு உண்டானபோது. மேற்சென்று - முற்பட்டுச் சென்று. இடித்தற்பொருட்டு – இடித்து அறிவு புகட்டுவதற்காகும்.]

இந்தக் குறள் மணிகளுக்கெல்லாம் ஒரு அணிகலமாய் அமைகின்றது 'கடிக்கும் வாளரவும் கேட்கும்' என்ற இந்தப் பாட்டு. கம்பனுக்குச் சீதையும் தமிழ்ப் பெண்தான் என்பதற்கும், இங்கே சீதை வீரத் தமிழ்ப் பெண்ணாகவே தர்மோபதேசம் செய்கிறாள் என்பதற்கும், குறள்மயமாகிய இந்த இறுதிப் பாட்டும் ஒரு நல்ல சான்றாகும்.

'அடுக்கும் நெறி இது, அடாநெறி இது' என்ற அறிவு காட்டுவதில் திருக்குறளைப் போன்ற வேறொரு அறநூலையோ அறிவு நூலையோ காண்பது அரிது. பழமறையாகிய வடமொழி வேதத்தின் ஸாரமும் அடா நெறியை விலக்கி அடுக்கும் நெறியைக் காட்டுவது தான் என்பது கம்பனின் கருத்து.

தசரத சக்ரவர்த்தியின் புலமையையும் பண்பாட்டையும் ஒழுக்க நெறியையும் குறிப்பிடும்போது:

அடாநெறி அறைதல்
செய்யா அருமறை
அறைந்த நீதி
விடாநெறிப் புலமைச்
செங்கோல் வெண்குடை
வேந்தர் வேந்தன்

[அறைதல் செய்யா – சொல்லாத. அருமறை – வேதம். அறைந்த – முழக்கிக் கூறிய. நீதி – அடுக்கும் நெறியாகிய நீதி வழியை. விடாநெறிப் புலமை – விடா நெறியாகப் பற்றிக் கொண்டிருக்கும் புலமை.]

என்று அகங் குளிர வாய் குளிரப் பாராட்டுகிறான் கவிஞன்.

'அடி, பிடி, உடை, உதை' என்னும் அடா நெறி ராவணனுடைய நெறி, தசரதனுடைய நெறியன்று. அடா நெறியைச் சொல்லாத வாயால் நீதி நெறியைச் சொல்லுகிறதாம் வேதம். விசேஷமாக, சத்தியம் அஹிம்சை என்ற இரண்டு வார்த்தைகளில் நீதியின் அடி நிலத்தையும் வேரையும் காட்டி விடுகிறது வேதம். இதன் விரிவுதான் ஓர் அற்புதப் புது மலர்ச்சிதான் திருவள்ளுவர் தந்த தமிழ்ப் பொது மறையும்.

தசரத சக்கரவர்த்தியின் வெண்குடை வாய்மையின் சின்னமாகவும், செங்கோல் அருளின் சின்னமாகவும் மதிக்கத் தக்கன என்பது மேலே காட்டிய செய்யுளில் கவிஞன் குறிப்பு. ராவண சக்கரவர்த்தியோ மெய்யிலான், அருளிலான்; எனவே அறம் இல்லாதவன். அறம் தழைக்க அருளெனும் வேரும், உண்மையென்ற நிலமும் வேண்டுமென்பது கம்பன் கொள்கை. இது தானே திருவள்ளுவரின் தேர்ந்த கொள்கையும்.

இத்தகைய தருமோபதேசத்தை உயிர்நிலையாகக் கொண்டு தான் சீதையின் வீரத் தமிழ் ராவணனுக்கு அறிவு புகட்டப் பார்க்கிறது. 'இடித்துச் சொல்லுபவர் இல்லையே' என்று இடிக் குரலில் முழக்குகிறது.

இப்படி அறத்துரை கேட்டதும் ராவண கோபம் என்ன பாடு படுகிறது, கோபமும் காதலும் எப்படிப் போராடுகின்றன என்றெல்லாம் ஓர் அதிசய மனோதத்துவ சித்திரம் வரப் போகிறது. அந்தக் கம்ப சித்திரத்தை உற்று நோக்குவதற்குமுன் வால்மீகத்திற் சீதை செய்யும் நீதோபதேசத்தையும் அதன் விளைவுகளையும் ஒருவாறு கண்டு கொள்வோம்.

'என்னுடன் ஆனந்தமாய்க் காலங் கழிக்க வேண்டும்' என்று ராவணன் வேண்டிக் கொண்டதும், சீதை மிக்க வருத்தத்துடன் தீனஸ்வரத்தில் மெது வாய் விடை கூறினாள். ஒரு துரும்பைக் கிள்ளி நடுவிலே போட்டுக் கொண்டு பேசத் தொடங்கினாள். சாதுக்கள் அநுஷ்டிக்கும் தர்மத்தையும் ஆசாரத்


தையும் அநுசரிக்குமாறு ராவணனுக்குப் புத்தி சொன்னாள்.

'இந்த நாட்டில் உனக்கு ஹிதத்தை உபதேசிக்கும் சாதுக்கள் இல்லையோ? நீ செய்யும் அகாரியத்திலிருந்து உன்னைத் தடுப்பவர் இல்லையோ? விபீஷணன், மால்யவான் முதலியவர்கள் இருப்பதால் அப்படிச் சொல்லக் கூடாது. அவர்களை வணங்கித் தர்மங்களை நீ கேட்கவில்லையோ?' என்றாள்.

'உன் நடத்தை உன்னை மாத்திரம் அழிக்குமோ? உன்னை அண்டியிருக்கும் அரக்கர்களையும் வேரறுக்குமே! லங்கா ராஜ்யம் நாசமடையப்போகிறதே!' என்றெல்லாம் எச்சரிக்கையும் செய்தாள்.

'உன் செல்வங்களைக் கொண்டு என்னை மயக்கப் பார்க்கிறாயே! நீ ராமனை அழைத்து வந்து என்னை ஒப்புவிக்க வேண்டும்' என்று சொல்லிவிட்டு ராம பராக்கிரமத்தையும் விவரித்துக் கூறினாள். 'நீ ராமனைச் சரணமாக அடைந்தால், நானும் வேண்டிய வரையில் உனக்கு உதவி செய்து பிரார்த்திப்பேன்' என்றாள்.

உக்கிரமான ராம பாணங்களையும் அவற்றின் நாச சக்தியையும் குறித்துப் பிரஸ்தாபித்தாள். 'புலியின் வாசனை அடிக்குமிடத்தில் நாய் நிற்க முடியுமா?' என்று கூடச் சொல்லி விட்டாள். 'நீ எங்கே ஒளித்துக் கொண்டாலும் ராம



பாணங்கள் உன்னைத் துரத்திப் போய்ச் சித்திரவதை செய்யும்' என்றும் சொல்லித் தீர்த்து விட்டாள்.

இப்படியெல்லாம் வால்மீகத்தில் பேசும் சீதைக்கும், கம்ப சித்திரத்திலே வீராவேசத்துடன் அறத்துறை காட்டும் சீதைக்கும் வேற்றுமை உண்டு என்பதை இரண்டு கவிச் சித்திரங்களையும் ஒப்பு நோக்குவோர் உணர்ந்து கொள்வது எளிது.

வால்மீகத்தில் சீதையின் ஹிதோபதேசம் இரு பகுதியாகப் பிரிந்திருக்கிறது. இடையே ராவண கோபம் குறுக்கிடுகிறது. கடைசியாகவும் ராவண கோபம் சீதையைப் பயமுறுத்துகிறது.

ராம பாணங்கள் துரத்தி வந்து சித்திரவதை செய்யும் என்று சீதை சொன்னதும், ராவணன் கோபங்கொண்டு, 'நீ சொன்ன ஒவ்வொரு கடுமையான வார்த்தைக்கும் உன்னைச் சித்திரவதை செய்ய வேண்டியதுதான். நான் உனக்குக் கெடுவிட்ட பன்னிரண்டு மாதங்களில் இன்னும் இரண்டு மாதங்களே இருக்கின்றன. அதற்குள் இணங்காவிட்டால் மறுநாளே என் சமையற்காரர்கள் உன்னை என் காலை உணவிற்காகப் பக்குவம் செய்வார்கள்' என்று பேரிடி போல் கர்ஜித்தான்.

இது கேட்ட தேவ கந்தர்வப் பெண்கள் உதட்டை நீட்டியும், கண்ணைச் சிமிட்டியும், தலையை ஆட்டியும் சீதையைத் தைரியப் படுத்தினார்கள். மறுபடியும் சீதை ராவணனுக்கு ஹிதத்தை உபதேசிக்கிறாள்.

'காட்டில் மதயானையும் முயலும் போர் புரிந்தால் முடிவென்ன? அந்த மதயானை நீ தான் என்று குதிக்காதே!' என்றாள். 'ராம லட்சுமணர்களை மோசஞ் செய்து என்னைத் திருடி வந்ததற்குக் காரணம் என்ன?' என்று கேட்டாள்.

இப்படியெல்லாம் மறுபடியும் சீதை சொல்லக் கேட்டு, ராவணன் கோபத்தால் கண்களை உருட்டி விழித்து ஒரு பயங்கரமான பார்வை பார்த்தான். இந்தச் சந்தர்ப்பத்தில் ராவணனுடைய தோற்றம் பொருத்தமாக வருணிக்கப் படுகிறது.

நீருண்ட காளமேகம் போலத் தோன்றுகிறான். புயங்கள் மலைச் சிகரங்கள் போலக் காணப்படுகின்றன. கொழுத்த சிங்கத்தின் பலத்துடன் நடை போடுகிறான். கண்களும் நாக்கின் நுனியும் நெருப்புக் கொழுந்துகளை நினைவூட்டுகின்றன. கிரீடமும் விசித்திர மாலைகளும் சிவந்த ஆடைகளும் தங்கத் தோள்வளை முதலிய அணிகளும் குண்டலங்களும் பிரகாசிக்கின்றன.

இப்படி இந்த ராவண வர்ணனையை வால்மீகி எவ்வளவு அதிசயமாக முடிக்கிறார் பாருங்கள்: 'வஸந்தகாலமே உருவெடுத்து வந்தது போல் இருந்தாலும், பலவகை அலங்காரங்களுடனிருந்தாலும் சுடுகாட்டிலுள்ள விருக்ஷம் போல் பார்க்கப் பயங்கரமாயிருந்தான்.' இத்தகைய வர்ணனை இத்தகைய சந்தர்ப்பத்தில் மகாமேதாவிகளான கவிகளுக்கே அகக் கண்ணுக்கு இலக்காகும்.


வால்மீகத்தில் இந்தப் பகுதி பின்வருமாறு முற்றுப் பெறுகிறது: 'சீதையை வெறிக்கப் பார்த்துக் காலஸர்ப்பம் போல் சீறிக்கொண்டு, "எல்லாவற்றையும் இழந்து திரியும் ராமனிடம் இன்னும் பிரியம் வைத்திருக்கும் உன்னை, சூரியன் இருட்டை அழிப்பது போல் இப்பொழுதே வதம் செய்கிறேன்" என்று அரக்கிமார்களை நோக்கினான்.'

அப்பால் அரக்கிமாருடைய விகார உருவங்களைக் கொஞ்சம் வருணித்துவிட்டு, அவர்களை நோக்கி ராவணன் சீதையை வசப்படுத்துமாறு கட்டளையிடுகிறான். சாம தான பேதம் என்ற உபாயங்களால் இயலாவிட்டால் தண்டோபாயத்தையும் உபயோகித்துப் பார்க்கலாம் என்கிறான். இப்படிக் கட்டளையிட்டு, காமத்தாலும் கோபத்தாலும் நிறைந்த உள்ளத்துடன் சீதையை அடிக்கடி மிரட்டுகிறான்.

அப்போது ராவணனுடன் வந்திருந்த பிரிய மனைவியான தானியமாலி விரைவில் நெருங்கி வந்து அரக்கனை இறுகத் தழுவிக்கொண்டு, 'மஹாராஜா, என்னுடன் வாரும். அவளோ மனிதப் பெண்; உம்மிடம் இஷ்டம் இல்லாதவள். முகம் வெளுத்து விகாரமாயிருப்பவள்' என்கிறாள். இப்படிச் சொல்லிக்கொண்டே அந்த ராட்சஸ பத்தினி தனது நாயகனை அவ்விடத்திலிருந்து இழுத்துக்கொண்டு போகிறாள். ராவணனும் கோபம் தணிந்து சிரித்துக்கொண்டே போகிறான். திரை விழுகிறது.

இனிமேல் கம்ப நாடகத்திலே திரை உயரக் காண்போம்.

சுந்தர ராமாயணம்



பி.ஸ்ரீ

438.

கோபத்திற்குத் தோல்வி

அரவரையும் அறிவரையும் ஆகவே பிருந்தது சீதையின் வீரவுரை. வேறு எப்படித்தான் இருக்க முடியும்? கன்னகியின் உதாரணத்தைத் தன் கவியுள்ளத்திலே கொண்டு கம்பன் தர்ம பத்தினியை வீர பத்தினியாக ராவணனுக்குப் புரியும் பாஷையிலே பேச வைத்த போதிலும், ராம பத்தினியல்லவா பேசுகிறாள்?

தர்மாத்மா ராமன்; அவனுடைய தர்மபத்தினி பேசுவது தானே தர்மம் — அறத்துறை? ஆனால் ராவணன் உபதேசம் கேட்கவா வந்திருக்கிறான்?

ராவண கோபம்

ஆசையின் முதிர்வும், சீதை தன்னைத் துரும்பினும் அற்பமாக மதித்துப் பேசிய பேச்சும் கோபத்தை ஜொலிக்கச் செய்து விடுகின்றன. ராவண கோபமல்லவா? — ராவணாகாரமாகவே பொங்கி விடுகிறது.

இடியும் மின்னலும் ஊழித் தீயுமாகத் தோன்றிவிட்ட கோபாவேசத்தைப் பாருங்கள்:

என்(று) அறத்துறை
கேட்டலும், இருபது
நயனம்

மின்திறப்பன
ஒத்தன: வெயில்விரி
பகுவாய்

குன்(று) இறத்தெழித்(து)
உரப்பினன். குறிப்ப(து) என்?
காமன்

தன் திறத்தையும்
கடந்தது சீற்றத்தின்
தகைமை!

[அறத்துறை–தர்மோபதேசம். மின் – மின்னல். பகு–பிளந்த. இற – இற்றுப் போகும்படி. தெழித்து – ஆரவாரஞ் செய்து. உரப்பினன்–அதட்டினன். குறிப்பது என் – குறிப்பிடுவதற்கு என்ன இருக்கிறது. காமன் தன் திறத்தையும் – மன்மதனது திறமையையும். தகைமை – தன்மை.]

இடி, மின்னல், உக்கிரமான வெயில் எல்லாம் ஏககாலத்திலே காணப்படுகின்றன. ராவண கோபம் ராவண காமத்தையும் வென்று விடுகிறது. ஆனால் வெற்றி நிலைக்குமா? — பார்க்கலாம்.

கோபத்தைத் தாண்டும் வெட்கமும் மேலும் மேலும் வளர்கிறது. தோள்களின் பூரிப்பே எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது! அந்தக் கவிகளைத்தான் பாருங்கள்.

சீதைக்கு ஆபத்தே வந்துவிட்டது என்று தான் தோன்றுகிறது. ஆனால் என்ன அதிசயம்! — அந்த அரக்கனால் இடம் பெயர்ந்து முன்னேறி வர முடியவில்லையே:

வளர்ந்த தாளினன்;
மாதிரம் அனைத்தையும்
மறைவித்(து)

அளந்த தோளினன்,
அனல்சொரி கண்ணினன்,
'இவளைப்

பிளந்து தின்பேன்!' என்(று)
உடன்றனன்; பெயர்ந்தனன்
பெயரான்,

கிளர்ந்த சீற்றமும்
காதலும் எதிரெதிர்
கிடைப்ப!

[நாணினன் – வெட்கத்தையுடையவன். மாதிரம் – திக்கு. உடன்றனன் – கோபித்தான். பெயர்ந்தனன் - சென்றான். பெயரான் – செல்லாமலிருந்தான். கிளர்ந்த – பொங்கி யெழுந்த. கிடைப்ப – தோன்ற.]

'பெயர்ந்தனன் பெயரான்!'—அதாவது போனான், போகாமலிருந்தான் என்று சொல்லும் நிலையில் முன் வைத்த கால்கள் முன்னே போக மறுத்து ஒத்துழையாமை செய்வதற்குக் காரணம் என்ன?

ஒரு கணம் தன்னை வென்று விட்ட கோபத்தைக் காதல் மறுபடியும் எதிர்த்துப் போராடுகிறது. இப்போது வெற்றி தோல்வி இல்லாமல், ஒன்றையொன்று மிஞ்சி விடாமல், இரண்டும் சம பலத்துடன் ஒத்த நிலையில் போராடிக் கொண்டிருக்கின்றன.

அனுமன் ஆத்திரம்

இங்கே இப்படி இந்தப் போராட்டம் நடந்து கொண்டிருக்க, மேலே யிருந்து பார்த்துக்கொண்டிருக்கும் அனுமனுடைய நிலை என்ன? அதையும் மறந்து விடாமல் இந்தக் காட்சிக்கிடையே சித்திரித்து விடுகின்ற கவியின் திறனாற்றலைப் பாருங்கள்:

அன்ன காலையின்
அனுமனும், 'அருந்ததிக்
கற்பின்
என்னை ஆளுடை
நாயகன் தேவியை
என்முன்
சொன்ன நீசனை
தொலைவதன் முன், துகைத்(து)
உழக்கி,
பின்னை நின்றது
செய்குவென்!' என்பது
பிடித்தான்.

[அன்ன காலையின் — அப்பொழுது. என்னை ஆளுடை நாயகன் — ஆட்கொண்டுள்ள தலைவனாகிய ராமன். சொன்ன—(தாறுமாறாய்) சொன்ன. நீசன்—(இங்கே) ராவணன். துகைத்து—துவைத்து. உழக்கி — ஹிம்ஸித்து. பின்னை—பின்பு. நின்றது — செய்ய வேண்டுவது. பிடித்தான்—உறுதியாக நினைத்தான்.]

கீழே நிற்கின்ற ராவணனுடைய பத்துத் தலைகளையும் பார்த்தால், 'இப்படியே துவைத்துத் தொலையலாக்கி விடலாமே, என்ன வாய்ப்பு!' என்று தோன்றுகிறதாம் அனுமனுடைய கோபக் கண்களுக்கு. 'மோதி மிதித்து விடு!' என்று அந்தத் தலைகள் வேண்டி அழைப்பது போலத் தோன்றுகிறதாம்.

அந்தத் தலைகளை அப்படியே உதிர்த்துத் தள்ளிவிட்டு இலங்கா பட்டணத்தையும் கடலுக்குள்ளே அமுக்கித் தள்ளிவிட்டு, சீதையைச் சுமந்து கொண்டு சுகமாய்த் திரும்பி விடலாமே!—என்று கூட நினைத்து விடுகிறது அனும கோபம்.

ஆனால் இவ்வளவு ரத்தினச் சுருக்கமாக ராமாயணம் முடிந்துவிடப் போகிறதா, என்ன? அனுமனுடைய பேராற்றலைச் சோதித்துக் கொள்ள இப்போது அவசியம் ஏற்படவேயில்லை.

எனினும் இந்த அனுமன் இப்போது கொண்டுள்ள சிந்தனைதான் சீதாராமர் மீது அனுமனுக்குள்ள எத்தகைய பக்தியை வெளியிடுகிறது பாருங்கள்:


'தனியில் நின்றவன்
தலைபத்தும் கடிதுகத்
தாக்கிப்,
பனியின் வேலையின்
இலங்கையைக் கீழுறப்
பாய்ச்சிப்,
புனித மாதவத்(து)
அணங்கினைச் சுமந்தனன்
போவன்

இனிதின் என்பது
நினைந்தனன்' கரம்பிசைந்
திருந்தான்.

[தனியில் நின்றவன்—தனியனாய் நின்ற ராவணன். கடிது உக—விரைவில் சிந்தும்படி. பனியின்—குளிர்ச்சி பொருந்திய. வேலையின் — கடலில். கீழுறப் பாய்ச்சி—கீழே அமுந்தும்படி போகச் செய்து. புனித மாதவத்து அணங்கினை — பரிசுத்தமான பெருந் தவத்தையுடைய சீதா பிராட்டியை. சுமந்தனன்—சுமந்து கொண்டு. போவன் இனிதின்

— இனிமையாகப் போவேன். என்பது நினைந்தனன்—என்பதை நினைந்தவனாய்; என்று எண்ண மிட்டவனாய். கரம் பிசைந்திருந்தான்—கைகளைப் பிசைந்து கொண்டிருந்தான்.]

'இவனைப் பிளந்து தின்பேன்!' என்ற அந்தக் கொடுஞ் சொற்களைக் கேட்டு, ராவணனுடைய சிறிய கண்களையும் முகத்தையும் கண்டு ஆத்திரம் கொண்ட அனுமன், 'நம் மனம் போன போக்கெல்லாம் செய்யத் தொடங்கி விட்டால் விளைவு எப்படி எப்படி நேருமோ? ஒருவேளை ராமனது பெருமைக்கே குறைவாகவும் நேர்ந்து விடுமோ? ராமனுடைய உள்ளப் பாங்கு தான் அனுமதிக்குமோ?' என்றும் எண்ணமிடுகிறான். எனவே உள்ளம் உடனே செயற்பட வில்லை. செயல் உறுதிப்படாத இந்நிலையில் ஆத்திரம் கையைப் பிசைந்து கொண்டிருப்பதைத் தவிர வேறு என்ன தான் செய்ய முடியும்?



காதலின் வெற்றி

எல்லாம் அதி விரைவில் நடைபெறுகிறது. அனுமன் தானே தண்டோபாயத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்று நினைத்தது தான் தாமசம், அதற்குள்ளே ராவண கோபத்தின் உக்கிரமும் ஓய்ந்து போகிறது. ராவண கோபத்தை ராவணன் காதலே வென்று வலியழித்து விடுகிறது.

காலாக்கினி போன்ற கொடிய கோபா[illegible]னியும் அவிந்து போகிறத[illegible] காதல் வெள்ளத்திலே:

ஆண்ட வாளரக்-
கன்கனன்(று)
அண்டத்தை
அழிப்பான்

மூண்ட காலவெந்
தியென முற்றிய
சீற்றம்,
நீண்ட காதல்நீர்
நீத்தத்தின் விவுற,
நிலையின்
மீண்டு நின்(று)ஒரு
தன்மையால் இனையன
விளம்பும்.

[ஆண்டவாளரக்கன்—ஆண்டு அ வாள் அரக்கன்; அப்பொழுது அந்த வாள் போல் கொடிய ராவணன். கனன்று—உக்கிரங்கொண்டு. அண்டத்தை அழிப்பான்—உலகத்தை அழிக்கும்பொருட்டு. மூண்ட கால வெந்தியென—மூண்டெழுந்த கொடிய காலாக்கினி போல. முற்றிய சீற்றம்—முதிர்ந்த கோபாக்கினி. நீண்ட காதல் நீர் நீத்தத்தின்—மிகுந்த காதலாகிய நீர் வெள்ளத்தினால். விவுற—அவிந்திட. நிலையின் மீண்டு நின்று—அந்தக் கோபாவேச நிலையினின்றும் திரும்பிப் பழைய நிலையில் நின்று. ஒரு தன்மையால்—அந்த ஒப்பற்ற காதல் மயமான தன்மையினால். இனையன—பின் வரும் வார்த்தைகளை. விளம்பும்—சொல்வானாயினான்.]

இந்த நிலையில் சீதையின் வார்த்தைக்குச் சம[illegible]மாகவே பதில் சொல்லப் போகிற[illegible] ராவணன். 'யுகாந்த காலம் தானோ? உலகமெல்லாம் எரிந்து போகுமோ?' எனக் கலங்கச் செய்த அந்தக் கோப காலாக்கினி இப்போது எங்கே?

ஊழித் தீயை யுகப் பிரளயம் அவித்தது போல ராவண கோபம் என்ற அதி உக்கிர விஷாக்கினி ஜ்வாலைகளையும் ராவணன் காதல் அடியோடு அவித்து விட்டதாம்.

கலைக்கும் அதிசய வெற்றி

ஐந்து பாடல்களில் ஓர் அதிசய [illegible]ம்ப சித்திரம். கம்பனுடைய சிறப்புகளுக்குச் சான்றாகிய [illegible]ப் [illegible]ருங் காட்சி.

அறத் துறை கேட்ட அரக்கனின் [illegible]ம் இடியும் மின்னலும் உக்கிர [illegible]யும் காட்டி எழுகின்றது முதலா[ம்] செய்யுளில், காதலுக்குப் பூர்ண[த்] தோல்வி.

[அ]டுத்த செய்யுளிலே கோபம் விசுவ[ம்] எடுக்கத்தான் பார்க்கிறது. எனி[னும்] தாழ்ந்றுப் போன காதல் மீண்டும் [எ]ழுந்து சம பலத்தோடு தாக்கி[யே] நிறுத்தி விடுகிறது [illegible]தை.

இறுதிச் செய்யுளில் கோபத்திற்கு முற்றும் தோல்வி; காதலுக்குப் பரிபூர்ண ஜயம்.

இந்த மனோதத்வ சித்திரம் இப்படியே அமைந்திருந்தாலும் கலையுலகில் ஒரு வெற்றிக் காட்சிதான். ஆனால் கம்பன் 'அனுமன் ஆத்திரம்' என்ற காட்சியையும் இடையே பெய்து தனக்கே உரிய ஓர் அபூர்வ கலைக்காட்சியாக்கி விடுகிறான்.

இந்த ஐந்து பாடல்களையும் மீண்டும் மீண்டும் ஓதி ஓதி அனுபவிக்க வேண்டும். இடையே சில தினங்கள் வேறு காரியங்களைப் பார்த்துவிட்டு மீண்டும் படித்து அனுபவிக்கலாம்: அப்போது ரஸிகர்களுக்கு இக் கம்ப சித்திரத்தின் அருமை பெருமைகள் அதிசயமாய்ப் புலனாகும் என்பது என் கருத்து.

அனுமன் அறிவொளி

இந்தக் கம்ப சித்திரத்திலும் அனுமனுடைய குண சித்திரம் ஒருவாறு வெளிப்படுகிறது. 'கல்லாத கலையும் வேதக் கடலுமே' என்று கருதுமாறு தோற்றமளித்தான் அனுமன் ராமனுக்கு,—ராம லட்சுமணர் முதல் முதல் பார்த்தபோது. வேதக் கடலை அறிவுப் பெருங் கடலுக்கெல்லாம் நினைவுக் குறியாகக் கொண்டு 'கல்லாத கலை'யைக் கவிதையாகக் கொள்ளலாம்.

கவிஞனின் உள்ளொளி போல் ஒரு வகை அறிவொளி அனுமனுள்ளத்திலே பிரகாசித்துக்கொண்டு பளிச்சுப் பளிச்சென்று வழிகாட்டி வந்ததென்று கருதலாம். இந்த அறிவொளிதான் இப்போது அனுமனது ஆத்திரத்தை அடக்கி உரிய வழி காட்டுகிறது.

இதே உள்ளறிவு இன்னும் தொழிலாற்றி எவ்வளவோ தொண்டாற்றப் போகிறது ராம தூதனுக்கு, நெருக்கடியான சந்தர்ப்பங்களில் எல்லாம். அத்தகைய நிகழ்ச்சிகளுக்கு ஒரு முற்குறியாகக் கருதலாம், அனுமன் இப்போது ஆத்திரத்தை அடக்கிக்கொண்ட இச் சிறு நிகழ்ச்சியை.

விபீஷணனும் கவிஞனைப்போல் அறிவு வாய்ந்தவனாகக் கூறப்படுகிறான். 'செழுங்கருணை ஒடிப் பொருகும் அறிவாளர்' என்று கவிமணி கூறுகிறாரே அத்தகைய மகாத்மாக்களின் அறிவொளிதான் அனுமனுக்கும் விபீஷணனுக்கும் ஒருங்கே உரியதாய்ச் சொல்லப்படுகிறது.

இதனால்தானே விபீஷணனுடைய 'உணர்வதை தன் உணர்வினால் உணர்ந்தான்' அனுமன்?

சுந்தர ராமாயணம்



பி.ஸ்ரீ

439

என்ன செய்ய முடியும்?

சென்ற [illegible] தவணைக் குன்றின மாய்ந்து போய், பொங்கிய செயலும் மங்கி ஓய்ந்து போகும் ஒரு காட்சியை இந்த பாடல்களில் கண்டோம். சிறிய சீற்றம் காதலால் ஆறி அணைந்து போக, ராவணன் சீதையின் வார்த்தைக்குச் சமாதானமாகவே பதில் சொல்லப் பார்த்து, மீண்டும் கனன்று பொங்குகின்ற காட்சியை இனிமேல் காண்போம்.

ராவணன் திருவிளையாடல்


'உன்னைக் கொலை செய்ய வேண்டும் என்று கணம் கொண்டேன்; ஆனால் உன்னைக் கொல்ல முடியாதவனாகப் போய் விட்டேன்!' என்று தன் செல்லாத வார்த்தைகளை ஒரு செல்லாத காசைத் தூக்கி வீசுவதுபோல வீசி அப்பால் எறிந்துவிட்டுப் பேசுகிறான். இதே சமயம் தனக்கு முடியாத செயல் ஒன்றுமே இல்லையென்றும் இறுமார்ந்து பேசுகிறான்.

'நீ என்னைப் பற்றி நினைத்துப் பேசுவதே, அந்தச் சொற்கள் உண்டு; உண்மையாகவே உண்டு!' என்கிறான். அவை உண்மையாகவே [illegible] [illegible] கொள்கிறான்.

[illegible]

லட்சுமணன் இல்லாத சமயம் பார்த்துச் சீதையைக் கவர்ந்து சென்றதும், ஜடாயுவின் சிறகால் அடிபட்டுத் தரையில் உருண்டதும், கார்த்த வீரியனின் வயிரக் கைகளில் பிடிபட்டுக் குத்து வாங்கிச் சிறையில் கிடந்ததும் ஆகிய மூன்று நிகழ்ச்சிகளையும் சீதை நினைப்பூட்டினாளல்லவா? அந்தப் பழிப்புச் சொற்களெல்லாம் சொல்லளவில் உண்மையாகப் பழிபாகத் தோன்றியபோதிலும், அவை விளையாட்டாகவே விளைந்தவை என்றான் ராவணன். ஏனென்றால் ராவணேச்வரனுக்கு முடியாததும் உண்டோ?

'வெற்றியும் விளையாட்டு; எனக்குத் தோல்வியும் விளையாட்டு!' எல்லாம் ஈச்வரன் திருவிளையாடல் போல ராவணன் திருவிளையாடல்—ராவணேச்வரலீலை!' என்று சீதையை நோக்கிச் சமாதானம் பேசும் ராவணனைப் பாருங்கள்:



'கொல்வென்'
என்(று)
உடன்றேன்;
உன்னைக்
கோறலென்
குறித்துச்
சொன்ன
சொல் ஒழிய;
அவற்றுக்
கொல்லார்
காரணம்
தெரியச்
சொல்லின்,

ஒன்றுவ(து) இதுஒல் -
லா(து)என்(று) எனக்கும்
ஒன்(று)
உலகத் துண்டோ ?
வெல்வதும் தோற்றல்
தானும் விளையாட்டின்
விளைந்த மேனாள் !

[கொல்வேன் என்று – நான் உன்னைக் கொன்று விடுவேன் என்று. உடன்றேன் - சினம் கொண்டேன். கொற வன் – கொல்ல முடியாதவனாக இருக்கிறேன். குறித்துச் சொன்ன –என்னைக் குறித்து நீ சொன்ன. சொல் உள – பழிப்புச் சொற்கள் உண்மையாகவே உண்டு. சொல்லின் – சொல்வதானால். ஒல்லுவது இது, ஒல்லாது - செய்யக் கூடியது இது. செய்ய முடியாதது இது. விளையாட்டின்—விளையாட்டாகவே. விளைந்த – விளைந்தன. மேனாள் – மேல் நாள்; முன்னாள்.]

ஒரு தர்க்க விளையாட்டு

'மேனாள் படையுவாய் தரையின் வீழ்ந்தாய்!' என்று சீதை சொன்னாளே, அத்தகைய பழிப்புச் சொற்களுக்கெல்லாம் விடையாகத்தான், 'வெல்வதும் தோற்றல் தானும் விளையாட்டின் விளைந்த மேனாள்' என்று, அவள் சொன்ன 'மேனாள்' என்ற அந்த வார்த்தையைத் தானும் உபயோகிக்கிறான்.

மேலும் சொல்லுகிறான்: 'உன் கணவனைக் கொன்றுவிட்டு உன்னைக் கவர்ந்து வந்திருக்கவும் என்னால் முடியும். அப்படியானால் நீயும் உயிரை விடக் கூடும். உனக்கு உயிர் போனால் எனக்கும் உயிர் போய்விடுமே அம்மா!' தர்க்க வாதம் எப்படி?

இதோ கேளுங்கள்:

ஒன்றுகேள் உரைக்க :
நிற்(கு)ஓர் உயிரென
உரியோன் தன்னைக்
கொன்று.கோள் இழைத்தால்,
நீநின் உயிர்விடின்
கூற்றம் கூடும் ;
என்தன் ஆருயிரும்
நீங்கும் என்பதை
இசைய எண்ணி,
அன்று நான் வஞ்சம்
செய்த(து); ஆர்எனக்(கு)
அமரின் நேர்வார் ?

[உரைக்க – நான் சொல்ல. நிற்கு – உனக்கு. ஓர் உயிர் என – ஒப்பற்ற உயிர் போல. உரியோன் தன்னை –உரிய கணவனாகிய ராமனை. கோள் இழைத்தால் – உன்னைக் கவர்ந்து கொண்டு வந்தால். நீ நின் உயிர்விடின் – நீ உன் உயிரை விடக்கூடும்; அப்படி நீ உயிர் விடுவாயானால். கூற்றம் கூடும் - உன் உயிரையும் கொள்ளும்படி எமன் வந்து விடுவானே, பாவி. அமரில் - போரில். நேர்வார் – எதிர் நிற்பவர்.]

எது பழிப்பு?

சீதை ராவணனுடைய வஞ்சனையைப் பழித்து அதைக் கோழைத்தனத்தின் அறிகுறியாகக் காட்டினாள்.

வஞ்சனை மான்ஒன்(று)
ஏவி மாயையால்
மறைத்து வந்தாய்

என்றாள்.

அதற்கு ராவணன் பதில் சொல்லுகிறான், 'மானென்று தொடர்ந்து போனவர், (ராவணேச்வரனாகிய) நானென்று தெரிந்து கொண்டால், இந்தத் திசையிலே தான் அடி யெடுத்து வைக்கத் துணிவார்களா?' என்று:

மான்என்ப(து) அறிந்து
போன மானுட
ராவார் மீண்டு
யான்என்ப(து) அறிந்தால்
வாரார் !

'அவசியமானால் அவர்களைக் கூவி நின்று ஏவல் கொள்வேனம்மா! அவர்களைக் கொல்ல மாட்டேன்: அது தான் என் வீரத்துக்குப் பழிப்பாகும்' என்கிறான்.

கூவிநின்(று) ஏவல்
கொள்வென் ; காணுதி
குதலைச் சொல்லாய் !

[காணுதி—கண்டு கொள் என் பராக்கிரமத்தை. குதலைச் சொல்லாய்—மழலைச் சொற்களை யுடையவளே.]

என்று வீரம் பேசி நெஞ்சில் ஈரமும் பேசிக் கொஞ்சப் பார்க்கிறான்.

சீதை ராமபாணத்தின் பெருமை பேசினாள்; ராம பராக்கிரமம் பேசினாள்.

சிலையெடுத்(து) இளையவன்
நிற்கச் சேர்ந்திலை !

என்று லட்சுமண பராக்கிரமும் பேசினாளல்லவா ?



இப்போது ராவணன், 'அந்த இருவரையும் ஒரு கையாலே பிடித்துக் கொண்டு வருவேன்; அந்த வேடிக்கையையும் நீ காண்பாய்!' என்கிறான்:

இற்றையின் பகலின் எய்தி, இருவரை ஒருகை யாலே
பற்றினென் கொணரும் தன்மை காணுதி, பழிப்பி லாதாய்!

[இற்றையின் பகலின் — இன்றைப் பகற் பொழுதிலேயே. எய்தி — அவர்கள் இருக்குமிடம் சென்று. பற்றினென் கொணரும் தன்மை — பிடித்துக் கொண்டு வரும் தன்மையை. காணுதி — காண்பாய். பழிப்பிலாதாய் — பழிப்பு இல்லாதவளே; பழிக்க முடியாதவளே.]

தன்னை நோக்கிப் பழிப்புச் சொற்கள் சொன்ன சீதையை நோக்கி, 'பழிப்பு இல்லாதவளே!' என்று ராவணன் அழைக்கும் வேடிக்கையைத் தான் பாருங்கள். 'உருவ அழகிலே ஒரு சிறிதும் பழிப்பு இல்லாதவள்' என்பது தான் ராவணன் கருத்து.

ஹாஸ்யமும் உக்கிர கோபமும்

ஆனால் 'இன்றைப் பகற்பொழுதிலேயே இருவரையும் ஒற்றைக் கையினால் பிடித்து வருகிறேன் பார்' என்கிறானே — இது என்ன குண்டு? இரவில் அல்லவா இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது?

'தின்னுவதற்கும் அந்த மனிதர்கள் பதமாகத் தான் இருப்பார்கள்!' என்று ஒரு ஹாஸ்ய வெடியும் போடுகிறான் — வெடிக்காத ஒரு சீன வெடிதான்!

'ஆனால் உன்னைத் தந்த உபகாரத்தை மறந்து விடுவேனா?' என்றும் ஒரு வாண வேடிக்கை காட்டுகிறான்.

இப்படியெல்லாம் பொய்யும் புலையும் பித்தலாட்டமுமாய்ப் பேசி வரும் போதே, சமாதான சொரூபம் மறைந்து மறுபடியும் கோபம் பிறிக் கொண்டு புறப்படுகிறது.

ராமலட்சுமணரைக் கொல்வதோடு அயோத்தியிலும் படையெடுத்துப் போய் அங்கே பரதன் முதலானவர்களையும் கொன்று தீர்த்து விடுவதாகப் பய

முறுத்துகிறான். மிதிலையிலுள்ளவர்களையும் வேரறுத்து விடுவதாக வீரம் பேசுகிறான். இவனுக்குத் தான் முடியாதது ஒன்றுமே இல்லையே!

கோபமும் மேலும் மேலும் பொங்குகிறது. அவன் பிறந்த இடத்தையும் புகுந்த இடத்தையும் ஏக நாசஞ் செய்து விட்டபின் அவனையும் வதைத்து விடுவேன் என்கிறான்:

பள்ள நீர் அயோத்தி
நண்ணிப் பரதனே
முதலி னோர்ஆண்(டு)

உள்ளவர் தம்மை
எல்லாம் உயிர்நுடித்(து),
ஊழித் தீயின்

வெள்ள நீர் மிதிலை-
யோரை வேர றுத்(து)
எளிதின் எய்திக்,

கொல்வென்நின் உயிரும்;
என்னை அறிந்திலை,
குறைந்த நாளோய்!

[பள்ள நீர் அயோத்தி-ஆழமான நீருள்ள அயோத்தி. நண்ணி-அடைந்து. பரதனே முதலினோர் ஆண்டு உள்ளவர் தம்மை — அங்கே உள்ளவர்களான பரதன் முதலிய எல்லாரையும். ஊழித் தீயின்—ஊழித் தீயைப்போல. வெள்ள நீர் மிதிலையோரை — வெள்ளமான நீருடைய மிதிலையிலுள்ளவர்களையும். எளிதின் எய்தி — சுலபமாக இங்கு மீண்டு வந்து. கொல்வென் நின் உயிரும் — உன் உயிரையும் வாங்கி விடுவேன். என்னை அறிந்திலை — என்னை இன்னாரென்று அறிந்து கொண்டாயில்லை. குறைந்த நாளோய் — வாழ்நாள் குறைந்தவளே; ஜாதகம் கிழிபட்டவளே.]

பொங்கி விடுகிறது கோபத்தீ 'ஊழித்தீயோ?' என்று நடுங்கும்படி. ராவணன் தன் உடைவாளையே உருவி விடுகிறான். அதுவும் தீயைப்போல் ஜொலிக்கிறது — அந்தக் கோப ஊழித் தீயின் நாக்கைப் போலே!

ஆனால் இந்த வாள் உபயோகிக்கப் படவில்லை. ஏன், வாளை உபயோகிக்க முடியவில்லை! ஏன்? எப்படி?

இதோ பாருங்கள்:

சதுரைத்(து) அழன்று
பொங்கி எரிகதிர்
வாளை நோக்கி,

'தீ(து)உயிர்க்(கு) இழைக்கும்
நாளும் திங்கள் ஓர்
இரண்டில் தேய்ந்த(து);

ஆதலின் நின்ற(து)
என்' என்(று), 'அறிந்தவாறு
அறிவாய்' என்னு,

போதரிக் கண்ணி-
னளை அகத்துவைத்(து)
உரப்பிப் போனான்.

[சது-இது; இவ்விதமான சொல். அழன்று பொங்கி-தீயைப்போல் கோபத்தால் பொங்கி. எரி கதிர்-எரிவது போன்ற ஒளி. தீது-தீமை. திங்கள்-மாதம். நின்றது-நேரிட இருப்பது. என்-எண்ணிப் பார். அறிந்த வாறு-அறிகின்ற வழியில். என்னு-என்று சொல்லி. போது அரிக்கண்ணி னள்—செந்தாமரை மலர் போன்ற, செவ்வரி படர்ந்த, கண்களையுடைய சீதை. உரப்பி-அதட்டி.]

ராவணன் இப்போது சீதையை நோக்காமல் கோபத் தீயோடு தன் எரிகதிர்வாளை நோக்கி, 'இன்னும் இரண்டு மாத காலம் தான் உனக்குத் தவணை; இதை எண்ணிப் பார்' என்று அதட்டுகிறான். அதட்டிய போதிலும், அவளைத் தன் உள்ளத்தில் வைத்த வண்ணமாகவே திரும்பிப் போகிறான்.

சீதையை இப்போது இவன் கண்கள் பார்க்காவிட்டாலும், மனக்கண் பார்த்துக் கொண்டே தானிருக்கிறது.

போதரிக் கண்ணி-
னளை அகத்துவைத்(து)

என்ற சொற்றொடர் ஊன்றி நோக்கத்தக்கது.

அந்தச் செவ்வரி படர்ந்த, செந்தாமரை போல் குளிர்ந்து மலர்ந்து மிளிர்கின்ற அந்தக் கண்களை எப்படித் தான் புறக்கணிக்க முடியும்? அக்கண்களுக்கு முன் எந்த வாள் தான் என்ன செய்ய முடியும்?

அந்தக் கண்களோ பழிக்கின்றன; வாயால் சொன்ன பழிப்புச் சொற்களைக் காட்டிலும் எவ்வளவோ பழிப்பான அம்புகளைப் பிரயோகிக்கின்றன.

சுந்தர ராமாயணம்



பி.ஸ்ரீ

410.

அன்பும் தூற்றா ?

சிரிப்பையே அறியாத முகங்கள் முன்னிலும் கடுமையாகி என்ன ஆர்ப்பாட்டம் செய்கின்றன! என்ன அதட்டுப் போடுகின்றன! 'எப்படியாவது ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் போதுமே விடுதலைக்கு— இந்த உலகத்திலிருந்தே விடுதலை பெறுவதற்கு !' என்று எண்ணியிடப் போகிறாள் சீதை.

அந்தக் காட்சியையும் அதற்கு முந்திய 'சீதையின் தனிமையுரை' என்ற காட்சியையும் காண்பதற்கு முன், அரக்கிமார்களை நோக்கி ராவணன் கட்டளையிட்டுப் போவதும், இவர்கள் சீதையைக் கடிந்து கூறுவதும், கடைசியாகத் திரிஜடையின் வார்த்தையைக் கேட்டு அரக்கிமார் அடங்குவதும் ஆகிய காட்சியை நாம் கண்டு போகவேண்டும்.

பயமும் நயமுமாய்

போகிற போக்கிலே ராவணன் அரக்கியரைத் தனியே சமிக்ஞையால் அழைக்கிறான். அழைத்து ஓர் எச்சரிக்கை செய்கிறான்.

'அஞ்சுவித் தாலும்
ஒன்றால் அறிவுறத்
தேற்றி யாலும்
வஞ்சியிற் செவ்வி
யாளை வசித்(து) என்பால்
வருவிர்; அன்றேல்,
நஞ்சுமக்(கு) ஆவென் !'
என்று, நகையிலா
முகத்துப் பேழ்வாய்
வெஞ்சினத்(து) அரக்கி
மார்க்கு வேறுற
உணர்த்திப் போனான்.

[அஞ்சுவித்து ஆயினும் - அஞ்சுவித்து ஆயினும்; பயப்படுத்தியாயினும். ஒன்ருல் – ஒரு வகையால் அறிவுற – அறிவு உற அவளுக்கு அறிவு உண்டாகும்படி. தேற்றியாலும் – தேற்றியாயினும். வஞ்சியிற் செவ்வியாளை – வஞ்சிக்கொடி போல் அழகு வாய்ந்த சீதையை. வசித்து - வசமாக்கி. என்பால் - என்னிடத்தில். வருவிர் – வாருங்கள். அன்றேல் – அப்படிச் செய்ய உங்களால் முடியவில்லை யென்ருல். நஞ்சு உமக்கு ஆவென் - உங்களை நான் நஞ்சுபோலக் கொன்று தீர்த்து விடுவேன். என்று – என்று. நகையிலா முகத்து – எப்போதும் சிரிப்பில்லாமல் கடுமையாகத் தோன்றுகிற முகத்தையும். பேழ்வாய் - பிளவுபட்ட வாயையும். வெஞ்சினத்து – கடுங்கோபத்தையும் உடைய. வேறு உற உணர்த்தி – தனியாகச் சொல்லிவிட்டு.]

அரக்கன் தன் அரண்மனைக்குத் திரும்பிய பின் சீதை எப்படித் தோன்றுகிருள்? உடனே அரக்கியர் என்ன செய்கிருர்கள் ?

கிரகணம் விட்டதும் பூர்ணசந்திர பிம்பம் எப்படித் தோன்றுகிறதோ அப்படித் தோன்றுகிருள் சீதை ஒரு கணம். கிரகணம் விழுங்கி வெளியே விட்ட தூய வெண்மதியம் போல் அவ்வளவு வசீகரமாகத் தோன்றுகிருள். கள்ளங் கவடு அறியாத குளிர் வெண்ணிலவு வீசுகிறது முகமண்டலம்.

அந்த அழகும் கூந்தலும், மயில் போன்ற சாயலையும் தோற்றுவிக்கின்றனவாம். ஆனுல் செளந்தரிய உணர்ச்சிக்காவது தூய நல்லுணர்ச்சிகளுக்காவது அரக்கிமார்களுக்கு அவகாசமும் இல்லை; ஆற்றலும் இல்லை. பயமும்

நயமுமாய் வசீகரிக்கவேணும் என்ற ராவணன் வார்த்தையே உள்ளத்தில் இடம் பெற்றிருக்கிறது.

தம் தமக்குத் தோன்றியவாறு அதட்டிப் பேசத் தொடங்குகிறார்கள் :

போயினன் அரக்கன் ;
பின்னர்ப் பொங்குஅரா
நுங்கிக் கான்ற

தூயவெண் மதியம்
ஒத்த தோகையைத்
தொடர்ந்து சுற்றித்

தீயவல் அரக்கி-
மார்கள் தெழித்(து)எடுத்(து)
உரப்பிச் சிந்தை

மேயின வண்ணம்
எல்லாம் விளம்புவர்,
உடன்று மிக்கார்.

[பொங்கு அரா — சீறும் தன்மையுள்ள ராகு என்ற பாம்பு. நுங்கிக் கான்ற — விழுங்கி வெளியே உமிழ்ந்த. தூயவெண் மதியம் ஒத்த — தூய வெண்ணிறமான பூர்ண சந்திரனை ஒத்த. தோகையை — மயில்போன்ற சாயலையுடைய சீதையை. தொடர்ந்து சுற்றி — தொடர்ச்சியாகச் சுற்றிக் கொண்டு. தீய வல் அரக்கிமார்கள் - மிகக் கொடிய அரக்கிமார்கள். தெழித்து எடுத்து உரப்பி — வருத்திச் சத்தம் போட்டு அதட்டி. சிந்தை மேயின வண்ணமெல்லாம் — தங்கள் மனம் போன போக்கெல்லாம். விளம்புவர் — வார்த்தை பேசலானார்கள். உடன்று — மிகவும் கோபித்து. மிக்கார் — மிகப் பலர்; மிகப் பலராகிய அரக்கியர்.]

பய வசியம்

அரக்கியருக்கு ஆத்திரம் பொங்குகிறது. உள்ளுக்குள்ளே ராவண பயம் பெரும் பயமாகி உபத்திரவிக்க, வெளியே சீதையைப் பயமுறுத்தும் விசித்திரத்தைப் பாருங்கள் :

முன்முன் நின்றார்,
கண்கனல் சிந்த
முடுகுற்றார்,

மின்மின் என்னும்
சூலமும் வேலும்
இவை ஓச்சிக்

'கொன்மின், கொன்மின்,
கொன்று குறைத்துக்
குடர்ஆரத்

தின்மின், தின்மின்'
என்று தெழித்தார்
சிலரெல்லாம்.

[முன்முன் நின்றார் — ஒருத்திக்கு முன் ஒருத்தியாக 'நான் முன்னே, நான் முன்னே' என்று சீதையைக் கடிவதில் முற்பட்டு நின்றவராய். முடுகுற்றார் — விரைந்தவர்களாய். மின்மின் என்னும் — 'மின்னல், மின்னல்' என்று அதிசயிக்கும்படி பளிச்சுப் பளிச்சென்று ஒளி வீசுகிற. சூலமும் வேலும் இவை — சூலாயுதமும் வேலாயுதமும் என்ற இந்த ஆயுதங்களை. ஓச்சி — உயரத் தூக்கிக் கொண்டு. கொன்மின் — கொல்லுங்கள். கொன்று குறைத்து - கண்டங் கண்டமாக வெட்டிக் கொன்று. குடர் ஆர — வயிறு நிறைய. தின்மின் - தின்னுங்கள். தெழித்தார் - அதட்டினார்கள்.]

நய வசியம்

சிலர் பயப்படுத்தாமல் நயமாகப் பேசியே வசப்படுத்தி விடலாமென்றும் நம்புகிறார்கள். 'அறிவுறத் தேற்றியாலும் வஞ்சியிற் செவ்வியாளை வசித்து என்பால் வருவிர்' என்பதும் ராவணன் கட்டளை தானே.

இந்த நயவஞ்சகக்காரிகளின் நாவிலேதான் ராவணனுடைய ஜாதி உயர்வும், பரம்பரையின் அருமை பெருமைகளும், அபார வைதிக லௌகிக அறிவுத் திறமைகளும் என்ன பாடு படுகின்றன, எவ்வளவு பிரமாதப்படுகின்றன !

'வையம் தந்தான்
நான்முகன் மைந்தன்,
மகன்மைந்தன்,

ஐயன் வேதம்
ஆயிரம் வல்லோன்.
அறிவாளன்,

மெய்யன்(பு) உன்பால்
வைத்துள(து) அல்லால்,
வினைவென்றோன்

செய்யும் புன்மை
யாதுகொல் ?' என்றார்
சிலரெல்லாம்.

[வையம் — உலகம். நான்முகன் — பிரம்மதேவன். வினை — நல்வினை, தீவினை என்ற இருவினை. புன்மை — இழி தொழில்; குற்றம்.]

ராவண வைபவம்

பிராம்மணர்கள் சாதாரணமாக 'இன்ன இன்ன ரிஷி பரம்பரையைச் சார்ந்தவர்கள் நாங்கள்' என்று சொல்லிக் கொள்வதுண்டு. ராவணனே நேரடியாகப் படைப்புக் கடவுளான ஸாக்ஷாத் பிரம்மதேவனுடைய 'பிராம்மண' பரம்பரையிலேயே வந்த முதல்தரமான பிராம்மணனாக விளங்குகிறான்.

ஒரு பிராம்மணன் காசியப கோத்திரத்தைச் சேர்ந்தவன் என்றால், காசியப முனிவரிடமிருந்து எத்தனையோ தலைமுறை ஆகியிருக்க வேண்டுமல்லவா? ராவணனுக்கோ தலைமுறைகூட அதிகம் ஆகவில்லை; பிரம்மா கொள்ளுப் பாட்டன்: இவன் ஸாக்ஷாத் கொள்ளுப் பேரன்:

வையம் தந்தான்
நான்முகன் மைந்தன்
மகன் மைந்தன்


இத்தகைய பிரம்ம குலம், வேறு பிராம்மணர்களுக்கு இல்லையல்லவா? ஆகவே 'ஐயன்' என்னும் பட்டத்துக்கு ராவணனைக் காட்டிலும் தகுதி வாய்ந்தவர் யார்?

பிறப்புக்குத் தகுந்த சிறப்பும் இருக்கிறதாம் இந்த ஐயனுக்கு:

ஐயன், வேதம்
ஆயிரம் வல்லோன்
அறிவாளன்.

'ஆயிரம் சாகைகளாகவுள்ள சாம வேதத்தில் நிபுணன்' என்பதைத்தான் 'வேதம் ஆயிரம் வல்லோன்' என்று அறிவிக்கிறார்கள். இந்த அறிவிப்பிலே 'ஒரு வேதம், இரண்டு வேதம், மூன்று வேதம், நாலு வேதம் மட்டுமா? இன்னும் எத்தனை வேதங்கள் இருந்தால் தான் என்ன? வேதம் ஆயிரம் — அதாவது எண்ணரிய மறைகளையும் — அப்படியே கரைத்துக் குடித்திருக்கிறான்!' என்ற பிரமிப்பும் தொனிக்கிறது.

இனி, வேதம் வல்லோனாக இருக்கலாம்; அறிவாளனாகவும்




இருக்கவேண்டுமென்ற அவசியம் இல்லையே! அபார வைதிகக் கல்வியுடன் லௌகிக அறிவில் சூனியமாக இருந்து விடலாமே! ராவணனோ அறிவாளனும் கூட. எட்டுப் படிப்பும் எழுத்தாணிக் கூர்மையும்தானா ராவணனுக்குத் தெரியும்? விசேஷமான பகுத்தறிவுக் கூர்மையையும் குறிப்பிடுகிறது 'அறிவாளன்' என்ற வார்த்தை.

இவ்வளவு விஸ்தாரமாக ராவண வைபவம் பேசுகிற அரக்கிமார்கள் ஒழுக்கத்தைக் குறித்து ஒரு வார்த்தையும் சொல்லவில்லையே. அவ்வளவு பெருமையுள்ளவனுக்கு, அத்தகைய பகுத்தறிவாளனுக்கு, ஒழுக்கமே மிகை, ஒழுக்கமே தன்மானக்குறைவு என்பது இவர்கள் கொள்கையா?

ராவணனை இவர்கள் 'வினைவென்றோன்' என்று குறிப்பிடுகிறார்கள். அதாவது நல்வினை தீவினைகளுக்கு அப்பாலுள்ள அதிவீரன் (Superman) என்கிறார்கள். சாமானியர்களுக்குத் தானே நன்மையும் தீமையும்?

மூன்று லோகத்திற்கும் ஒரு முதலாளியாக விளங்குவது போல், ராட்சஸ மகா ராஜ்யத்திலே ஏக சக்ராதிபதியாக விளங்குவது போல், பரமாசாரியனாகவும் விளங்குகிறான், பிரம்மதேவனிய கொன்றுப் பேறும் ஆயிரம் வேதங்களுக்கு அக்கரை கண்டவனுமாகிய ராவணன். 'வடக்கே பரமேச்வரன், தெற்கே ராவணேச்வரன்' என்றவாறு ஈச்வரனாகவும் விளங்குகிறான். இவ்வளவு 'ஸர்வ'வல்லமை வாய்ந்தவனுக்கு நன்மையென்றும் தீமையென்றும் உண்டோ?

'வினைவென்றோன் செய்யும் புன்மை யாதுகொல்?' என்று சீதையையே கேட்கிறார்கள் அரக்கிமார்கள். 'ஏண்டியம்மா, ராவணன் செய்வது தானே நன்மை? அவன் புன்மை செய்ய முடியுமா?' என்கிறார்கள்.

ஒரு தமிழ் நிகண்டின் ஆசிரியர் 'கொடை' என்ற சொல்லுக்கு, 'கிருஷ்ண தேவராயன் கொடுப்பது' என்று பொருள் படக் கூறியுள்ளார். ராவண ராஜ்யத்தின் அகராதியில் 'நன்மை' என்பதற்குப் பொருளாக 'ராவணன் செய்வதெல்லாம்' என்று தான் எழுதியிருக்கவேண்டும்!

இவ்விதமாக ராவண மான்மிய காலட்சேபம் செய்தவரும் அரக்கியர்கள், 'அப்படிப்பட்ட பெரியோன், தன்னை நோக்கித் தவங்கிடக்கும் எத்தனையோ அழகிகளை அலட்சியம் செய்துவிட்டு உன்னிடத்தில் அல்லவா அன்பு வைத்திருக்கிறான்? உன்னுடைய பாக்கியமே பாக்கியம்!' என்கிறார்கள்.

அந்த அன்பு மெய்யன்பு என்பதையும் உறுதிப்படுத்துகிறார்கள்:

மெய்யன்(பு) உன்பால்
வைத்துள நல்லான்,
வினைவென்றோன்

செய்யும் புன்மை
யாதுகொல்?' என்றார்
சிலரெல்லாம்.


அன்பு குற்றமாகுமா? அதிலும் மெய்யன்பு? 'அந்தோ! உன் திருமேனிக்கு அன்பிழைத்த வன்பிழையால்' என்ற சூர்ப்பணகை வாக்கிலே 'அன்பிழைத்தலும் வன்பிழையா?' என்று ஒரு கேள்வி கேட்கப்படுகிறதல்லவா?

சீதைக்கு மெய்யும் தெரியவில்லை, மெய்யன்பும் தெரியவில்லை என்று பரிதாபப் படுகிறார்கள்:

'என்னிக் காணாய்
மெய்ம்மையும்!' என்றார்
சிலரெல்லாம்,

மெய்யன்பிலே குற்றமில்லை; அதை எண்ணிக் காணாத சீதையே குற்றவாளி! எனினும் குற்றவாளியிடம் இப்போது எவ்வளவு அனுதாபம் காட்டுகிறார்கள்!

சுந்தர ராமாயணம்



பி.ஸ்ரீ

441

துக்க சிகரம்

பயமுறுத்தல்களுக்கும் சீதை அஞ்சவில்லை; நய வஞ்சகங்களுக்கும் அசையவில்லை. 'பெண்களிலெல்லாம் நீதான் தீயவள்' என்று கூடச் சொல்லத் துணிகிறார்கள் அத்தீயோர்.

மெய்ம்மையும் காணவில்லையே!

'உள்ளபடியே அன்பு கொண்டிருக்கிறான் எங்கள் ராவணேச்வரன்; மெய்யன்பு உன்பால் வைத்திருப்பதல்லாமல் வேறு என்ன தான் செய்து விட்டான் புன்மையாக? எல்லாம் உன் நன்மைக்குத் தானே அம்மா!' என்றார்கள். சீதையோ அந்த அன்பையும் கண்டு கொள்ளவில்லை; மெய்ம்மையையும் கொஞ்சமும் கண்டு கொள்ளவில்லையே என்று குறைப்பட்டுக் கொள்கிறார்கள்.

பட்சபாதமில்லாமல் பொது நோக்காக நோக்கி மெய்ம்மையைக் கண்டு கொள்ளவில்லையே என்று கவலைப்படுகிறார்கள். புண்ணில் கோலிட்டது போலப் பேசி விட்டாளே ராவணனிடம் என்று புலம்புகிறார்கள்.

ஆம்; காதலால் புண்பட்டுக் கிடக்கும் நெஞ்சிலே சீதையின் கொடுஞ் சொற்களும் சேர்ந்து விட்டால் என்ன செய்வது? ராஜபக்தியுள்ள அரக்கிமார் கவலைப்படாமல் வேறு என்னதான் செய்யப் போகிறார்கள்?—இந்த மெய்ம்மையும் கண்டு கொள்ளவில்லையே சீதை?

'பிணி செய்தாய்!'

இவ்வளவுதானா, இன்னும் பேசுகிறார்களாம். 'பார், பார்; ஒரு பிணி பரவி உலக மனிதர்களையெல்லாம் ஒழித்து விடுமே!' என்று கூடப் பரிதாபப்படுகிறார்கள். (அடடா, எவ்வளவு கருணை மனிதரிடம்!)

அந்த நோய் எப்படி, எங்கிருந்து வரப் போகிறது? அப்பெரும் பிணியை விதைப்பவள் சீதைதானும்.

மண்ணில் தீய
மானுயர் நத்தம்
வழியோடும்,

பெண்ணில் தீயோய்!
நின்முதல் மாயும்
பிணிசெய்தாய்,

புண்ணில் கோலிட் —
டாலன சொல்லி;
பொதுநோக்கால்

எண்ணிக் காணாய்
மெய்ம்மையும்?' என்றார்
சிலரெல்லாம்

[மண்ணில் – இம் மண்ணுலகத்தில். தீய – அழிந்து போகும்படி. மானுயர் – மானுடர்கள். வழியோடும் - வம்சத்துடனே. பெண்ணில் தீயோய் - பெண்களில் தீயவளே, நின்முதல் மாயும் – நீயும் அடியோடு அழியும்படியான. கோலிட்டால் அன – கோலால் குத்தினாற் போன்ற.]

தீ விதைப்பாய்!

'மனித வர்க்கத்திற்கெல்லாம் முழுக்க முழுக்க நாசத்தை விதைத்துக் கொண்டிருக்கிறாள் சீதை!' என்றவர்கள், பிறந்த குலத்திற்கும் புகுந்த குலத்திற்கும் ஒருசேர நாசத்தை விளைக்கத்

தொடங்கி விட்டாள் இவள் என்பதை விசேஷமாக வற்புறுத்துகிறார்கள்;

'புக்க வழிக்கும்
போந்த வழிக்கும்
புகை வெந்தி

ஒக்க விளைப்பான்
உற்றனை அன்றோ,
உணர் வில்லாய்?

இக்கணம் இற்றாய்
உன் இனம் எல்லாம்;
இனி வாழாய்;

சிக்க உரைத்தேம்'
என்று தெழித்தார்
சிலரெல்லாம்.

[புக்க வழி – புகுந்த குலம். போந்த வழி – பிறந்த குலம். புகை வெந்தி – புகைகின்ற கொடிய நெருப்பு. ஒக்க – ஒருசேர, விளைப்பான் உற்றனை – விளைக்கும்படி, அதாவது வாரியிறைக்கும் படி, பொருந்தினாய். இக்கணம் – இப்போதே. இற்றாய் உன் இனம் எல்லாம் – உன்னுடைய இனமெல்லாம் ஒழித்து விட்டாய். இனி வாழாய்–இனிமேல் நீயும் உயிர் வாழமாட்டாய். சிக்க – சுருக்கமாக; நன்றாக. உரைத்தேம் – நாங்கள் உரைத்தோம். தெழித்தார் – அதட்டினார்கள்.]

கண்ணீருக்கிடையே சிரிப்பு

அதட்டல் மிரட்டல்களுக்கெல்லாம் சீதையின் மனவுறுதி சற்றும் குறையவில்லையென்று கண்டதும் அரக்கியர் பரபரத்து விழுங்குபவர் போல வந்து மேல் விழுகிறார்கள்.

வெல்வான் நம்கோன்!

[நம்கோன் – நம் தலைவனாகிய ராவணன்.]

என்று ராஜவாழ்த்து முழக்கம் செய்து கொண்டே நெருங்குகிறார்கள், நெருக்குகிறார்கள்.

'வாருங்கள்; வந்து பட்சித்து விடுங்கள் இவளை!' என்று கர்ஜிக்கிறார்கள்.

வெல்வான் நம்கோன்;
தின்னுமின்!

என்றெல்லாம் கூக்குரலிட்டுத் தொந்தரவு செய்யும் அவர்களுடைய ஆத்திரத்தை எண்ணிப் பார்க்கிறாள் சீதை.

அரக்கிமார் செயலையும் அந்த ராவணன் கட்டளையையும் நினைக்க நினைக்கக் கண்ணீர் வருகிறது. ஆம்; சீதையின் அழகிய கண்களிலிருந்து கண்ணீர் பெருகுகிறது.

அந்தக் கண்ணீருக்கிடையே—என்ன அதிசயம்!—சீதைக்குச் சிரிப்பும் வந்துவிடுகிறதாம், தன் நிலைமையை நினைக்க நினைக்க:

நல்லாள் நல்ல
கண்கள் கலுழ்ந்தே
நகுகின்றாள்!

[நல்லாள் – சீதை. கலுழ்ந்தே – கண்ணீர் பெருக்கி அழுது கொண்டே- நகுகின்றாள் – சிரிக்கிறாள்; சிரிப்பவளானாள்.]

'நல்லாள்' என்று குறிப்பிடுவது கருத்தூன்றி நோக்கத்தக்கது.

நந்தனார் அவர்பெயராம்—மிக
நல்லவ ராம்இந்தத் தொல்லு
லகில்

என்று பாடுகிறார் 'நந்தன் சரித்திரக் கீர்த்தனை' ஆசிரியர். பக்தி சிகரத்திலே சாலும் நந்தனார் அவர்.

இங்கே நற்குண மென்னும் சிகரத்தில் காணும் சீதையை 'நல்லாள்' என்றும், இவள் கண்களை 'நல்ல கண்கள்' என்றும் குறிப்பிடுகிறான் கவி.

எந்தக் கண்கள் உண்மையையும் அழகையும் வெளியிட்டு உலகத்திற்கெல்லாம் நல்வாழ்வை அருளுகின்றனவோ, அந்தக் கண்கள் இப்போது எல்லாத் துயரங்களையும் ஒருங்கே அனுபவிப்பது போல் காணப்படுகின்றன.

திரிஜடை குறுக்கிடல்

இப்படிக் குணமென்னும் சிகரத்தில் நின்ற நல்லாள் துக்க சிகரத்தையும் அடைந்து விட்டதாகக் கண்டுகொண்ட திரிஜடை,

முன்னே சொன்னேன்
கண்ட கனவின்
முடிவம்மா!

என்று ஏற்கெனவே சொன்ன அந்தக் கனவை நினைப்பூட்டுகிறாள்.

அரக்கிமார்களுக்கு ஓர் எச்சரிக்கை; சீதைக்கு ஒரு நம்பிக்கைத் தூண்டுகோல். ஆனால் வார்த்தை அரக்கிமாரை நோக்கிச் சொன்னதுதான்.

திரிஜடை இப்படிக் குறுக்கிட அரக்கிமார் ஒருவாறு அறிவுற்று அமர்ந்து விடுகிறார்களாம்:

இன்னோ ரன்ன
எய்திய காலத் —
திடை, நின்றாள்,
'முன்னே சொன்னேன்
கண்ட கனவின்
முடிவம்மா !
பின்னே வாளா
பேதுறு வீரேல்
பிழை' என்றாள் ;
'அன்னே ! நன்(று)' என்—
றார், அவ ரெல்லாம்
அறிவுற்றார்.

[இன்னோரன்ன - இப்படிப்பட்ட கா
ரியங்கள். எய்திய காலத்திடை — நேரி
ட்ட காலத்தில்; நேர்ந்தபோது. நின்
றாள் - அங்கு நின்றவளாகிய திரிஜடை.
வாளா — வீணாக. பேதுறு வீரேல் — உங்
கள் பேதைமைக் குணத்தால் அவளை
வருட்டினால். அன்னே — தாயே. அறி
வுற்றார் — ஒருவாறு அந்தச் சமயத்திற்கு
அறிவுபெற்று உடன்பட்டார்கள்.]

வால்மீகத்திலே

'முன்னே சொன்னேன் கண்ட கனவின் முடிவம்மா!' என்று இங்கே குறிக்கப்படும் கனவைத் திரிஜடை முன்னே சொல்லவில்லை, இப்போது, இந்தச் சந்தர்ப்பத்திலேதான் சொல்லுகிறாள் என்பது வால்மீகம்.

ராவணன் சென்ற பின்பு அரக்கியர் உபத்திரவிக்கச் சீதை துக்கித்து, 'நான் உயிர் விடுவதே சிறந்தது' என்று பிரலாபித்தாள்.

இந்தச் செய்தியைச் சில அரக்கியர் ராவணனிடம் தெரிவிக்க ஓடினார்கள். பிறகு மற்ற அரக்கியர் சீதையைச் சூழ்ந்து கொண்டு, 'நீ தற்கொலை செய்து கொண்டு எங்களிடமிருந்து தப்பப் பார்க்கிறாயோ? உன்னை நாங்கள் இப்போதே கொன்று உன் மாமிசத்தைப் பங்கிட்டு உண்ணப் போகிறோம்' என்றனர். இத் தருணத்திலே திரிஜடை குறுக்கிட்டுக் கனவுரைத்ததாக வால்மீகம் கூறுகிறது.

'நீங்கள் உங்களைத் தான் தின்று கொள்ள வேண்டும். இப்போது தான் ஒரு பயங்கரமான கனவு கண்டேன்'



என்று திரிஜடை பீடிகை போட, உடனே சீதையைச் சூழ்ந்து கொண்டிருந்த அரக்கியர் திரிஜடையைச் சூழ்ந்து கொண்டார்களாம். கோபக்காரிகள் பயம் பிடித்தவர்களாய், 'அந்தக் கனவை எங்களுக்கு விவரமாகச் சொல்லு' என்று கேட்டார்களாம். அப்பால் திரிஜடை 'கேளுங்கள்' என்று தான் கண்ட கனவினை விவரிக்கத் தொடங்கினுள் என்கிருர் வால்மீகி.

கனவை விவரித்துவிட்டு, 'ராமன் விரைவில் வந்து சீதையை மீட்டுக் கொண்டு போவான்' என்ருள் திரிஜடை. 'ஓடிப் போங்கள்; எங்கேயாவது ஒளித்துக் கொள்ளுங்கள்' என்று கூடப் பயமுறுத்திப் பார்த்தாள்.

காப்பாற்ற வேண்டுமென்று சீதையை நோக்கிப் [illegible]தனை செய்து கொள்ளுங்கள் என்றும் புத்திமதி சொன்னுள்.

'இவளுடைய சுபாவம் இவளுக்குத் தெரியாது. இவளை ஒருவன் சரணமடைந்தாலே போதும்; அவனுடைய தவறுகளை யெல்லாம் மறந்து பரம உபகாரம் செய்வாள். ஆகையால் நம்மைக் கோரமான ஆபத்திலிருந்து காப்பாற்ற இவளுக்கே திறமையுண்டு' என்று திரிஜடை கூறுவதாகவும் வால்மீகம் அ[illegible]விக்கிறது. இந்தக் கருத்து எப்ப[illegible] கம்பனுள்ளத்தில் ஊறி,

நல்லாள் நல்ல
கண்கள் கலுழ்ந்தே
நகுகின்ருள்

என்ற ஒரு புத்தப் புதிய கலா சிருஷ்[illegible]யாக மாறிப் பிறந்திருக்க வேண்டும்!

இயற்கைச் சித்திரமும் கலைச் சித்திரமும்

சீதை ராவணனுக்கு அறத்துறை கூறிய போக்கிலும், வால்மீகிக்கும் கம்பனுக்குமுள்ள வேற்றுமையை ஒருவா[illegible] கண்டோம். சீதைக்கும் ராவணனுக்கும் இடையே நிகழ்ந்த சம்பாஷணை[illegible] ஆறு வினுவிடைகளாகக் கலாரஸிக[illegible] ஸ்ரீ வி. ஆர். ஸ்ரீநிவாஸையங்கார் காட்[illegible]யுள்ளார். அந்த வினுவிடைகளில் வா[illegible]மீகி சித்திரம் இனிது விளங்கக் கா[illegible]லாம். ஆனல் அத்தகைய கம்ப சித்[illegible]ரத்தை அப்படி ஒரு வினுவிடைக் கூ[illegible]டில் அமைத்துக் காட்ட இயலாது.

ராவணன் சீதையைப் பயமுறுத்தி[illegible] கட்டத்திலோ கம்ப சித்திரம் கலையு[illegible]கிலேயே ஒரு புதுமைக் கற்பனை. வா[illegible]மீகியின் இயற்கைச் சித்திரத்திற்கு[illegible] கம்பனின் கலைச் சித்திரத்திற்கும் உள்[illegible] வேற்றுமையை இரண்டு சித்திரங்களையும் உற்று நோக்கி உணர்ந்து கொள்[illegible] வேண்டியதுதான்.

அரக்கியர் சீதைக்குப் போதிப்பது[illegible] சீதையை உபத்திரவிப்பதுமாகிய கட்டத்திலே கம்பன் விசேஷமான கலை[illegible]த்திறமையை வெளியிட்டிருக்கிருனென்[illegible] சொல்ல முடியாது.

இனிமேல் சீதை உயிர் துறக்[illegible] முயல்வதும், அனுமன் சீதையிடம் பே[illegible] நிச்சயிப்பதுமான ஒரு கட்டம் வர[illegible] போகிறது. சுந்தர காண்டத்திலே மி[illegible]வும் முக்கியமான ஒரு கட்டம்.

இதை அடுத்துத்தான் 'கணை[illegible] கொடுப்பது' என்ற சுந்தர கா[illegible] உயிர்நிலை. கணையாழி கொடுப்பது[illegible] அனுமன் சூடாமணி பெறுவதும் சுந்த[illegible] காண்டத்தின் அதிவிசேஷமான உயிர்[illegible] பகுதி என்பது நம்மவர் நம்பிக்கை.

இந்த இதிகாசப் பகுதியை வால்மீகி[illegible] கம்பன் என்ற இரண்டு மகா கவிகளு[illegible] எவ்விதமாக அமைத்துக் காட்டுகிரு[illegible]கள் என்பதைப் படிப் படியாக இவ[illegible] வரும் வாரங்களில் பார்க்கலாம்.